بسم الله الرحمن الرحيم

عقيدة أهل السنة والجماعة

تأليف: الإمام أبي جعفر الطحاوي رحمه الله

அஹ்லுஸ் ஸுன்னா
வல்ஜமாஆவுடைய
கொள்கை விளக்கம்

இமாம் அபூ ஜஅஃபர் அத்தஹாவீ

(ரஹ்மதுல்லாஹி அலைஹி)

ஹிஜ்ரி239 - 321)

தமிழில்:

உமர் ஷரீஃப் இப்னு அப்துஸ் ஸலாம்

إن هدى الله هو الهدى

دار الهدى

DARUL HUDA

Price : Rs. 40/-

About This Book

Name of the Book: **AHLUS SUNNAH WAL JAMA'A KOLKAIKAL** | Language: Tamil | Date of Publication : November 2007 | Edition : 2nd (Oct 2019)| Total Pages: 64 | Copies : 3000 | Printed by : Patel Graphics, Chennai - 6.

DH-TML 2025

Published by:

DARUL HUDA

Quality Islamic Book Publishers

211 (102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai-1.

Phone :+91-44-25247866, | darulhuda.chennai@gmail.com

Mobile : +91-98401 74121 | www.darulhuda.net

ஆசிரியர் அறிமுகம்

பெயர்	:	அஹ்மது
தந்தை	:	முஹம்மது
பாட்டனார்	:	ஸலாமா இப்னு அப்துல் மலிக்
குடும்பம்	:	அஸ்து
வமிசம்	:	கஹ்தான்
ஊர்	:	தஹா
நாடு	:	எகிப்து
பிறப்பு	:	ஹிஜ்ரீ 239
இறப்பு	:	ஹிஜ்ரீ 321

இவர்களை இமாம் அபூ ஜஅஃபர் அத்தஹாவீ என்று அழைக்கப்படும். இவர்களின் தாய், தந்தை மற்றும் தாய் மாமனான இஸ்மாயீல் இப்னு யஹ்யா முஸ்னீ ஆகியோர் பெரும் அறிஞர்களாக விளங்கினார்கள்.

இமாம் அவர்கள் ஹதீஸ்கலை வல்லுணராகவும் ஃபிக்ஹு கலை அறிஞராகவும் ஹதீஸ்களை அறிவிப்பதில் ஏற்றுக் கொள்ளப்பட்ட, நம்பத் தகுந்த அறிவிப்பாளராகவும் விளங்கினார்கள். அனைத்துத் தரப்பு அறிஞர்களும் இமாமைக் கண்ணியப்படுத்தினார்கள்.

இமாம் அபூ ஹனீஃபாவின் (ரஹ்) ஆய்வுகளை அதிகம் அறிந்தவராகவும் ஏனைய அறிஞர்களின் ஆய்வுகளை கற்றுத் தேர்ந்தவராகவும் ஃபிக்ஹு, ஹதீஸ் அல்லாத மற்ற கல்விகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இமாம் தஹாவீ விளங்கினார்கள்.

இமாம் அவர்கள் ஏறத்தாழ நாற்பது நூற்கள் எழுதியுள்ளார்கள். அவற்றில் மிகக் குறிப்பிடத்தக்கவை.

1. சுனன் அஷ்ஷாஃபியீ
2. ஷர்ஹ் மஆனீ அல்ஆஸார்

3. ஷர்ஹ் முஷ்கில் அல்ஆஸார்

நன்மையை ஏவுவது தீமையைத் தடுப்பது, சத்தியத்தைப் பகிரங்கப்படுத்துவது, துணிந்து சத்தியத்தை ஏற்றுக் கொள்வது, இது விசயத்தில் தம் ஆசிரியர்களையோ ஆட்சியாளர்களையோ, சமகாலத்து அறிஞர்களையோ பொருட்படுத்தாமல் இருப்பது ஆகியவை இமாம் அவர்களின் சிறப்புப் பண்பாகும்.

இமாம் அவர்களின் இந்நூலை கல்விமான்கள் அனைவரும் அங்கீகரித்துள்ளனர்.

அல்லாஹ் இமாம் தஹாவீ (ரஹ்) அவர்களுக்கு அருள்புரிவானாக! அவர்களின் இருப்பிடத்தை சொர்க்கத்தில் ஆக்குவானாக! அவர்களையும் நம்மையும் நல்லோரில் சேர்ப்பானாக! ஆமீன்!!

வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

நுழையும்முன்

கண்ணியத்திற்கும் உயர்வுக்கும் உரிய அல்லாஹ்விற்கே புகழ் அனைத்தும், அவனுடைய அருளும் பாதுகாப்பும் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தார், தோழர்கள் மற்றும் அவர்களைப் பின்பற்றுகின்ற மக்கள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.

கல்வியில் சிறந்தது அல்லாஹ்வைப் பற்றி அறியப் பயன்படுகின்ற கல்வியாகும். அல்லாஹ்வை மட்டும் இறைவனாக ஏற்றுக் கொண்டுள்ள முஸ்லிம்களில் பலர் அறிஞர்களிலிருந்து பாமரர்கள்வரை அல்லாஹ்வைப் பற்றிய அறிவில் மிக பலவீனர்களாக இருக்கின்றனர். குர்ஆனை ஓதுகின்றனர். ஆனால், அதன் பொருளை அறிவதில்லை. அப்படியே அதன் பொருளை அறிந்தாலும் கருத்துகளை ஆழமாகச் சிந்திப்பதில்லை.

இன்னும் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ என்று தங்களை சொல்லிக் கொள்கின்றவர்கள் முற்றிலும் அந்தப் பெயருக்குத் தகுதியற்றவர்களே. காரணம் அம்மக்கள் எந்த இமாம்களை ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களைப் பற்றியும் அவர்கள் கொண்டிருந்த கொள்கையைப் பற்றியும் இவர்களுக்கு எந்த அறிவும் இல்லை. ஃபிக்ஹு சட்டங்களில் மட்டும் அந்த இமாம்களின் கூற்றுகளை அங்கீகரிக்கின்றனர். அதுவும் முழுமையாக இல்லை. தங்களின் மனஇச்சைகளுடன்தான் அவற்றையும் ஏற்கின்றர். கொள்கை பாடங்களில் அந்த நான்கு இமாம்களின் கூற்றை இவர்கள் ஏற்பதில்லை. தங்களுக்கு ஆன்மீகத்தில் நேர்வழி காட்ட என தனியாக தரீக்காக்களையும் ஞானப் பாதைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றனர். குர்ஆன், ஹதீஸ், ஸஹாபாக்கள் அவர்களைப் பின்பற்றியவர்களின் கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை முற்றிலும் புறக்கணித்து விட்டனர். “முன்னோரின் பாதை மிகப் பாதுகாப்பானது. ஆனால் பின்னோரின் பாதை மிக ஞானமுடையது, உறுதியானது.” என்று வியாக்கியானம் கூறி தங்களின் தவறுகளை நியாயப்படுத்திக் கொள்வார்கள்.

இவர்கள் மிகப் பாதுகாப்பானது என்று வருணித்த ஸலஃப்களின் கொள்கைகளைப் பின்பற்றுவோரை வழி கெட்டவர்கள், குழப்பவாதிகள், வஹ்ஹாபிகள், சுன்னத் வல்ஜமாஅத்தை விட்டு வெளியேறியவர்கள் என்று முத்திரையிட்டு மக்களை நேரிய கொள்கைகளை அறிய விடாமல் தடுப்பார்கள். இவர்கள் நடத்துகின்ற மதரஸாக்களில் அல்லாஹ்வைப் பற்றியோ ஏனைய இஸ்லாமிய கொள்கைகள் பற்றியோ விரிவான பாடங்கள் நடத்தப்படுவதில்லை. மாறாக அவை புறக்கணிக்கப்பட்டு விட்டன என்பதே உண்மை.

இன்று சுன்னத் வல்ஜமாஅத் என்று தங்களை கூறிக் கொள்கின்ற தேவ்பந்திகள் அல்லது பரேலவிகள் இவர்கள் அனைவரும் முஃதஸிலா, ஜஹ்மிய்யா மற்றும் அத்வைதக் கொள்கையினர் ஆகியோரின் கொள்கைகளில்தான் இருக்கின்றனர்.

ஒருவர் நிதானமாக ஆய்வு செய்தால், தேவ்பந்திகள் மற்றும் பரேலவிகள் மத்தியில் உள்ள கருத்து வேற்றுமைகள் வார்த்தைகள் அளவில்தான் இருக்கின்றன. உண்மையில் இரண்டு கூட்டத்தினரும் ஒரே கொள்கை உடையவர்கள்தான் என்பதைப் புரிந்து கொள்வார். ஆனால் தேவ்பந்திகள் குணம் மற்றும் சில செயல்களில் பரேலவிகளை விட்டு விலகி நின்றாலும், தங்களின் கொள்கைகளை யாராவது விமர்சித்தால் இவர்கள் கடுமையானவர்களாக ஆகிவிடுவார்கள். அவர்களுக்கு எதிராகப் பொய்களைப் பரப்புவது, அவர்களுக்கு சதி செய்வது, அவர்களை வெறுப்பது, அடிப்பது போன்ற செயல்களைச் செய்து நாங்களும் உண்மையில் பரேலவிகள்தாம், பெயர்தான் வேறு என்பதை செயல் வடிவத்தில் நிரூபித்து விடுவார்கள்.

இந்த தேவ்பந்திகளுக்கு முன்னோர், பெரியோர் என்றால் நபி (ஸல்), ஸஹாபாக்கள், அவர்களின் மாணவர்கள், இமாம்கள் ஆகியோரில் எவரும் கண்ணுக்குத் தெரிய மாட்டார்கள். சிறப்பிற்குரிய மூன்று தலைமுறையினருக்குப் பின்வந்த சூஃபிகளும், கடந்த முந்நூறு, நானூறு ஆண்டுகளுக்குள் வாழ்ந்தவர்கள் தாம் கண்ணுக்குத் தெரிவார்கள்.

“எங்கள் ஷைகு, பெரியாருக்குத் தெரியாத ஆதாரம் உங்களுக்குத் தெரிந்து விட்டதா? அவர்களுக்குப் புரியாதது உங்களுக்குப் புரிந்து விட்டதா? அவர்கள் என்ன வழிகேடர்களா? உங்களைவிட அவர்கள் அதிகம் கற்றவர்கள்” என்று பரேலவிகள் பாடும் பாட்டைத்தான் இவர்களும் பாடுவார்கள். கொள்கையில் இவர்கள் பின்பற்றுகின்ற அபுல்ஹசன் அல்அஷ்அரீ அவர்கள் தம் கொள்கையிலிருந்து தவ்பா செய்து ஸலஃப்களின் கொள்கையின் பக்கம் திரும்பி விட்டார்கள் என்பதுதான் உண்மை. இருப்பினும் இவர்கள் அதைக் கண்டு கொள்வதில்லை.

கிரேக்க ஃபல்ஸபாவுடன் கூடிய இறைக் கொள்கையைப் படிப்பதை இமாம்களும் அவர்களுக்கு முந்தியவர்களும் கடுமையாக பழித்திருந்தும் விமர்சித்திருந்தும் அதைத்தான் இவர்கள் படிக்கின்றார்கள்.

இந்நூலின் ஆசிரியர் இமாம் தஹாவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் எந்தக் கொள்கைகளை இங்கு விவரித்து இருக்கிறார்களோ அவை முற்றிலும் குர்ஆன், சுன்னா மற்றும் ஸலஃப்களின் விளக்கத்திற்கு உட்பட்டதாகும். வழிதவறியவர்களின் கொள்கையிலிருந்து விலகியதாகும்.

மக்களும் அறிஞர்களும் நடுநிலையுடனும் அல்லாஹ்வின் பயத்துடனும் இந்நூலைப் படிக்க வேண்டும்.

அல்லாஹ்வைப் பற்றிய கொள்கையிலும் மறுமை பற்றிய செய்திகளிலும் நம் சிறப்பிற்குரிய முன்னோர்களான ஸஹாபாக்களும் இமாம்களும் இருந்த பாதையே சரியானது; பாதுகாப்பானது. குர்ஆனையும் சுன்னாவையும்அதன் விளக்கங்களையும் அவர்கள் புரிந்த விதமே சரியானது; அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. புதுமைகளின் வெளித் தோற்றம் நம்மைக் கவர்ந்தாலும் அவை வழிகேடுகளே.

இந்நூலைத் தாங்களும் படியுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுங்கள்! மக்தபுகளில் இதைப் போதியுங்கள்.

இன்ஷா அல்லாஹ் இதைத் தொடர்ந்து இன்னும் பல அரிய நூல்கள் வெளிவர இருக்கின்றன. இதற்கு முன்னும் ஷைகு உஸைமீன் (ரஹ்) எழுதிய கொள்கை விளக்க நூலையும், இமாம் இப்னு தைய்மிய்யா (ரஹ்) எழுதிய கொள்கை விளக்க நூலையும் வெளியிட்டிருக்கிறோம். அவற்றையும் படித்து பயன்பெறுங்கள். அல்லாஹ் நம் பாவங்களை மன்னிப்பானாக! அவன் அருளையும் அன்பையும் நமக்குத் தருவானாக! நல்லோரில் நம்மைச் சேர்ப்பானாக! ஆமீன்!!

அல்ஹம்துலில்லாஹ்.

வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரசூலில்லாஹ் வஅலா ஆலிஹி வ ஸஹ்பிஹி அஜ்மயீன்.

بسم الله الرحمن الرحيم

قال العلامةُ حجة الإسلام أبو جعفر الوراق الطَّحاوي بمصْرَ -رحمهُ الله-:

هذا ذكرُ بيانِ عقيدةِ أهلِ السنَّةِ والجماعةِ على مذهبِ فقهاءِ الملةِ: أبي حنيفة النعمانِ بن ثابت الكوفي، وأبي يوسُف يعقوب بن إبراهيم الأنصاريّ، وأبي عبد الله محمد بن الحسن الشيباني رضوان الله عليهم أجمعين، وما يعتقدون من أصول الدين ويدينون به رب العالمين.

இம்மார்க்கத்தின் சட்ட வல்லுநர்களான அபூ ஹனீஃபா நுஃமான் இப்னு ஸாபித் அல்கூஃபி, அபூ யூசுஃப் யாகூப் இப்னு இப்ராஹீம் அல்அன்சாரி, மற்றும் அபூ அப்தில்லாஹ் முஹம்மது இப்னு அல்ஹசன் அஷ்ஷைபானி (ரிழ்வானுல்லாஹி அலைஹிம்-அல்லாஹ்வின் பொருத்தம் அவர்கள் மீது இறங்கட்டும்) ஆகியோரின் மத்ஹப் - சட்ட ஆய்வுப்படி, சுன்னா எனப்படும் நபிவழி மற்றும் ஜமாஆ என்றழைக்கப் படுகின்ற நபித்தோழர்களைப் பின்பற்றுவோர் கடைப்பிடிக்கின்ற கொள்கையின் விளக்கத்தையும், மார்க்கத்தின் அடிப்படைகளில் அவர்கள் எதை கொள்கையாக பின்பற்றுகின்றார்களோ அதன் விளக்கத்தையும், அகிலத்தின் இறைவனுக்கு மார்க்கமாக அவர்கள் எதை ஏற்றுக்கொள்கின்ற அதன் விளக்கத்தையும் கூறுவதுதான் இந்நூல்.

பாடம் 1

அல்லாஹ்வும் அவனது தன்மைகளும் செயல்களும்

نقُولُ في تَوحيدِ اللهِ مُعتَقدينَ بتوفيق الله:

அல்லாஹ்வுடைய அருளால், அல்லாஹ்வின் தவ்ஹீது குறித்து நாங்கள் சொல்கிறோம். நாங்கள் சொல்வதைக் கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

إنَّ اللهَ واحدٌ لا شريكَ لَهُ.

1. நிச்சயமாக அல்லாஹ் ஒருவன்; அவனுக்கு இணை அறவே இல்லை.

وَلا شيءَ مِثْلُهُ.

2. அவனைப் போன்று எதுவும் இல்லை

وَلا شَيْءَ يُعْجِزُهُ.

3. அவனை எதுவும் பலவீனப்படுத்த முடியாது.

وَلا إلٰهَ غَيْرُهُ.

4. அவனை அன்றி வணங்கத் தகுதியானவன் எவனும் இல்லை; எதுவும் இல்லை.

قَديمٌ بلا ابتِدَاء، دَائمٌ بلا انْتهاء.

5. அவன் என்றும் இருந்தவன்; அவனுக்குத் தொடக்கம் இல்லை.

அவன் என்றும் இருப்பவன்; அவனுக்கு முடிவு இல்லை.

لا يَفنَى ولا يَبيدُ.

6. அவன் அழிய மாட்டான். அவன் இல்லாமல் போக மாட்டான்.

ولا يكونُ إلا ما يُريدُ.

7. அவன் நாடுவதைத் தவிர (அகிலத்தில் எதுவும்) நடக்காது.

لا تَبلُغُه الأَوْهَامُ، ولا تُدْرِكُهُ الأَفْهَامُ.

8. கற்பனைகள் அவனை அடையாது. அறிவுகளால் அவனைச் சூழ்ந்தறிய முடியாது. (அவன் எப்படி இருப்பான் எனக் கற்பனை செய்ய முடியாது. நமது அறிவால் அவனை முழுமையாக அறிந்திட முடியாது.)

وَلا يُشْبِهُ الأَنَامَ.

9. அவன் படைப்புகளுக்கு ஒப்பாகாதவன்.

حَيٌّ لا يَمُوتُ، قَيُّومٌ لا يَنَامُ.

10. அவன் உயிருள்ளவன்; மரணமில்லாதவன்; பிறரின் உதவியின்றி என்றும் இருப்பவன்; நிலையானவன்; தூக்கமற்றவன்.

خَالِقٌ بِلا حَاجَة، رَازِقٌ بلا مُؤْنَة.

11. படைப்பாளன்; படைப்பினங்களின் தேவையற்றவன்; உணவளிப்பவன். அவனுக்கு அதில் செலவு(ம் சிரமமும்) ஏதும் இல்லை.

مُمِيتٌ بِلا مَخَافَةٍ، بَاعِثٌ بِلا مَشَقَّةٍ.

12. மரணிக்கச் செய்பவன்; அதில் அவனுக்கு பயம் ஏதும் இல்லை. (படைப்புகளை) மீண்டும் எழுப்புபவன்; அதில் அவனுக்கு ஏதும் சிரமம் இல்லை.

مَا زالَ بِصِفَاتِهِ قَديماً قَبْلَ خَلْقِهِ، لم يَزدَدْ بِكَوْنِهِم شَيْئاً، لم يكنْ قَبلَهُم مِنْ صِفَتِهِ، وكما كانَ بصفاته أزَليًّا، كذلك لا يزالُ عَلَيْها أبديًّا.

13. படைப்புகளைப் படைப்பதற்கு முன்பிருந்தே அவனுடைய தன்மைகளுடன் அவன் இருந்தான். படைப்புகளைப் படைத்ததால் அவனுடைய தன்மைகளில் எதுவும் கூடிவிடவில்லை. அவன் தன்னுடைய தன்மைகளுடன் எப்போதும் இருந்தான். அப்படியே எப்போதும் இருப்பான்.

ليسَ منذُ خَلَقَ الخلْق اسْتَفَادَ اسمَ «الخَالِق»، ولا بِإِحْدَاثِ البريَّةَ استفادَ اسمَ «الباري».

14. படைப்புகளைப் படைத்ததால் அவனுக்கு (காலிக்) ‘படைப்பாளன்’ என்ற பெயர் வரவில்லை. இப்பிரபஞ்சத்தை உருவாக்கினான் என்பதால் (பாரீ) ‘உருவாக்குபவன்’ என்ற பெயர் அவனுக்கு வரவில்லை.

له معنى الرُّبُوبيَّةِ ولا مَرْبُوبَ، ومعنى الخالق ولا مخلُوقَ.

15. பரிபாலிக்கின்ற எதுவும் இல்லாமலும் அவனுக்குப் பரிபாலிக்கும் தன்மையான ‘ருபூபிய்யா’ உண்டு. படைக்கப்பட்டவை ஏதும் இல்லாமலும் அவனுக்கு ‘படைப்பாளன்’ (காலிக்) என்ற தன்மை உண்டு.

وكما أنَّه مُحيِي الموْتَى بَعْدَما أَحْيَا، استحقَّ هَذَا الاسْمَ قَبْلَ إِحْيَائِهم، كذلِكَ استحقَّ اسْمَ الخَالِق قبْلَ إنْشَائِهم.

16. இறந்தவர்களை உயிர்ப்பித்த பிறகு அவனுக்கு ‘முஹ்யுல்மவ்தா’ (இறந்தவர்களை உயிர்ப்பிப்பவன்) என்று கூறப்படுவது போலவே படைப்புகளை உயிர்ப்பிப்பதற்கு முன்பும் அவன் இப்பெயருக்கு முழுத் தகுதி உடையவனே! அப்படியே அவன் படைப்பினங்களைப் படைப்பதற்கு முன்பும் படைப்பாளன்‘காலிக்’ என்ற பெயருக்குத் தகுதியுடையவன் ஆவான்.

ذلك بأَنَّهُ على كلِّ شَيْءٍ قديرٌ، وكلُّ شَيْءٍ إليهِ فَقِيرٌ، وكلُّ أمْرٍ عَلَيْهِ يَسيرٌ. لا يحتاجُ إلى شَيْءٍ، ﴿لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ وَهُوَ السَّمِيعُ البَصِيرُ﴾[الشورى:١١].

17. ஏனெனில், அவன் அனைத்தின் மீதும் பேராற்றல் உடையவன். அனைத்தும் அவன்பால் தேவையுள்ளவை. அனைத்தும் அவனுக்கு இலகுவானவை. அவன் எதன்பாலும் தேவையுடையவன் இல்லை.

அல்லாஹ்கூறுகிறான்: அவனுக்கு ஒப்பானது ஒன்றுமில்லை. அவன் (அனைத்தையும்) செவியுறுபவனாகவும், உற்று நோக்குபவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன்42:11)

خَلَقَ الخَلْقَ بعِلْمِهِ.

18. படைப்புகளைத் தன் அறிவால் படைத்தான்.

وَقَدَّرَ لهمْ أَقْدَارًا.

19. அவர்களுக்கு விதிகளை ஏற்படுத்தினான்.

وَضَرَبَ لهم آجَالاً.

20. அவர்களுக்குத் தவணைகளை நிர்ணயித்தான்.

ولم يَخْف عَليهِ شَيْءٌ قَبْلَ أَنْ يَخْلُقَهُم. وَعَلِمَ ما هُمْ عَامِلُونَ قَبْلَ أَنْ يَخْلُقَهُم.

21. அவன் அவர்களைப் படைப்பதற்கு முன்பு அவனுக்கு ஏதும் மறைந்திருக்கவில்லை. அவர்கள் என்ன செய்வார்கள் என்று அவர்களைப் படைப்பதற்கு முன்பே அவன் அறிந்திருந்தான்.

وأَمَرَهُم بِطَاعَتِهِ، ونَهَاهُم عَنْ مَعْصِيتِهِ.

22. அவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டான். அவனுக்கு மாறுசெய்வதிலிருந்து அவர்களைத் தடுத்தான்.

وَكُلُّ شَيْءٍ يَجْرِي بِتقْديرِهِ ومَشيئَتِهِ ، ومَشيئَتُهُ تَنْفُذُ ، لا مَشيئَةَ للعبادِ إلا ما شاءَ لهم ، فما شاءَ لهم كان ، وما لم يَشأ لم يَكُن.

23. அவனுடைய ஏற்பாடு மற்றும் நாட்டத்திற்கு ஏற்பவே அனைத்தும் நடக்கின்றன. அவனது நாட்டம்தான் நிறைவேறும். அவன் அடியார்களுக்கு நாடியதுதான் அவர்களுக்குக் கிடைக்கும். அதைத்தவிர அவர்களுக்கு வேறு நாட்டம் இல்லை. அவன் அவர்களுக்காக நாடியது (நடந்தது,) நடக்கும். அவன் நாடாதது (நடக்கவில்லை,) நடக்காது.

يَهْدي مَنْ يشاءُ، وَيَعْصِمُ ويُعَافِي فَضْلاً، ويُضِلُّ مَنْ يَشاءُ ويَخْذلُ ويَبْتلي عَدْلاً.

24. அவன் நாடியவருக்கு நேர்வழி காட்டுகிறான். அவரைப் பாதுகாக்கின்றான். அவருக்கு சுகமளிக்கிறான். இவை அவனுடைய கருணையே ஆகும். நாடியவரை வழிகேட்டில் விட்டுவிடுகிறான்; சோதிக்கிறான்; இவை அவனது நீதியே.

وكُلُّهُم يتقلَّبُون في مَشيئَتِهِ بَيْنَ فَضْلِهِ وَعَدْلِهِ.

25. அனைவரும் அவனுடைய நாட்டத்தில் அவனுடைய கருணை மற்றும் நீதிக்கிடையே சுற்றி வருகின்றனர்.

وَهُوَ مُتَعَالٍ عَن الأَضداد والأَندَاد.

26. அவனுக்கு முரண்பட்டவை இல்லை, எதிரானவை இல்லை. அவனுக்கு நிகர் இல்லை. அவனுக்குச் சமமானவர் இல்லை. இவையனைத்தையும் விட்டு அவன் மிக உயர்ந்தவன்.

لا رَادَّ لقضَائِه، ولا مُعَقِّبَ لحُكْمِه،

ولا غالبَ لأمرِه.

27. அவனது தீர்ப்பை தடுப்பவர் (மற்றும் ரத்து செய்பவர்) இல்லை. அவனது சட்டத்தை மாற்றுபவர் இல்லை. அவனது கட்டளையை மிகைப்பவர் இல்லை.

آمَنَّا بذلِك كُلِّهِ، وَأَيْقَنَّا أنَّ كُلاًّ مِنْ عِنْدِهِ.

28. இவை அனைத்தையும் நாம் நம்பிக்கை கொள்கிறோம். அனைத்தும் அவனிடமிருந்தே நடக்கிறது என்று உறுதி கொள்கிறோம்.

பாடம் 2

அல்லாஹ்வின் தூதர்

وأَنَّ مُحَمَّداً عَبْدُهُ المصطَفى، ونبيُّه المجْتَبى، ورَسُولُهُ المُرْتَضَى.

29. நிச்சயமாக முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவனுடைய அடிமை ஆவார்கள். அவனால் ஒப்புக் கொள்ளப்பட்ட அவனுடைய நபி (இறைச் செய்தி பெற்றவர்) ஆவார்கள். அவனால் திருப்தி கொள்ளப்பட்ட அவனுடைய ரசூல் (இறைத் தூதர்) ஆவார்கள்.

وأَنَّه خَاتمُ الأنبياءِ، وإِمَامُ الأَتْقِيَاءِ، وسيِّدُ المرسَلينَ، وحَبيبُ ربِّ العالَمين.

30. நிச்சயமாக அவர்தாம் இறைத்தூதர்களின் முத்திரை (இறுதியானவர்); இறையச்சமுடையவர்களின் முன்னோடி; இறைத் தூதர்களின் தலைவர்; அகிலங்களின் இறைவனுடைய நேசர்.

وكُلُّ دَعْوى النُّبوةِ بَعدَهُ فَغَيٌّ وَهَوى.

31. 'அவருக்குப் பிறகு இறைச் செய்தியை நான் பெறுகிறேன்' என்று எவர் கூறினாலும் அவருடைய கூற்று வழிகேடு மற்றும் மனஇச்சையே.

وَهُو المبعوثُ إلى عَامَّةِ الجِنِّ وكَافَّة الوَرَى بالحقِّ والهدى، وبالنُّور والضِّياء.

32. அவர் அனைத்து ஜின்களுக்கும் எல்லா மனிதர்களுக்கும் சத்தியம், நேர்வழி, ஒளி மற்றும் பெரும் வெளிச்சத்தைக் கொண்டு

அனுப்பப்பட்டவர் ஆவார்கள்.

பாடம் 3

அல்குர்ஆன்

وأَنَّ القرآنَ كَلامُ اللهِ، منْهُ بَدَأ بلاَ كَيْفِيَّة قَوْلاً، وأنْزله على رَسُولِهِ وَحْياً، وَصَدَّقهُ المؤمنون على ذلك حَقًّا، وأَيْقَنُوا أنه كلامُ اللهِ تعالى بالحقيقة،

33. நிச்சயமாக, குர்ஆன் அல்லாஹ்வுடைய பேச்சு. அவனுடைய சொல்லாகவே அது வெளிப்பட்டது. இதை எப்படி என்று விசாரிக்க முடியாது. அவன் அந்த குர்ஆனை தன் தூதருக்கு 'வஹ்யி' (இறை அறிவிப்பு) மூலம் இறக்கினான். இறை நம்பிக்கையாளர்கள் அவரை இவ்விசயத்தில் உண்மையாளர்கள் என்று சத்தியமாக நம்பினர். உண்மையில் அது அல்லாஹ்வுடைய பேச்சு என்று உறுதி கொண்டனர்.

ليس بمخلوقٍ ككلام البَرِيَّةِ، فمن سمِعَهُ فَزَعَمَ أَنَّهُ كلامُ البشرِ، فَقَدْ كَفَرَ، وقد ذمَّهُ اللهُ وعابَهُ وأوعَدهُ بسَقَر،

حيث قال تعالى: سَأُصْلِيهِ سَقَرَ [المدثر:٢٦]

فَلَمَّا أَوْعَدَ اللهُ بِسَقَرٍ لمنْ قال إِنْ هَذَا إِلَّا قَوْلُ الْبَشَرِ [المدثر:٢٥]

عَلِمْنَا وأَيْقَنَّا أنه قولُ خالقِ البَشرِ، ولا يُشْبِهُ قولَ البشر.

படைப்புகளின் பேச்சைப் போன்று அது புதிதாக படைக்கப்பட்டதில்லை. குர்ஆனை செவிமடுப்பவர் அதை மனிதனின் பேச்சு என்று

எண்ணினால் அவர் திட்டமாக இறைவனை நிராகரித்து விட்டார். அல்லாஹ் அவரைப் பழிக்கின்றான்; இழிவுபடுத்துகின்றான். ‘சகர்’ என்ற நரகம் அவனுக்கு உண்டு என்று அவனை எச்சரிக்கின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

“இது மனிதர்களுடைய சொல்லேயன்றி வேறில்லை.” (அல்குர்ஆன்74:25)

என்று சொன்னவனை,

ஆகவே, நாம் அவனை ‘சகர்’ நரகத்தில் எறிவோம். (அல்குர்ஆன்74:26)

‘சகர்’ என்ற நரகத்தைக் கொண்டு அல்லாஹ் எச்சரிக்கை செய்தான். இதன் மூலம் நிச்சயமாக குர்ஆன் மனிதர்களைப் படைத்த இறைவனின் பேச்சாகும்; மனிதர்களின் பேச்சுக்கு ஒப்பானதில்லை என்று உறுதியாக அறிந்து கொண்டோம்.

وَمَنْ وَصَفَ اللهَ بِمعنًى مِنْ مَعاني البشر، فقدْ كَفَر، فمن أَبْصَرَ هذا اعْتَبر، وعَنْ مِثْلِ قول الكفَّارِ انْزَجَر، وعَلِمَ أَنَّه بصفاته ليسَ كالبشر.

34. மனிதர்களின் தன்மைகளில் எந்தத் தன்மையின் மூலமாகவும் அல்லாஹ்வை யாராவது வர்ணித்தால் அவர் அவனை நிராகரித்து விட்டார். இதை அறிந்து கொண்டவர் நல்ல பாடம் கற்றுக் கொண்டார். இறை நிராகரிப்பாளர்களின் கூற்றுக்கு ஒப்பானதிலிருந்து விலகிக் கொண்டார். அவன் தன்னுடைய தன்மைகளில் மனிதனைப் போன்று இல்லை என்றும் அறிந்து கொண்டார்.

பாடம் 4

அல்லாஹ்வைப் பார்ப்பது

والرؤْيةُ حقٌّ لأهلِ الجَنَّةِ، بِغَيْرِ إحَاطَةٍ ولا كَيْفيَّةٍ، كما نَطق به كتابُ ربّنا وُجُوهٌ يَوْمَئِذٍ نَاضِرَةٌ(٢٢)إِلَى رَبِّهَا نَاظِرَةٌ [القيامة:٢٢-٢٣]

وتَفْسيرُهُ عَلى ما أرادَهُ اللهُ تَعالَى وَعَلِمَهُ.

35. சொர்க்கவாசிகளுக்கு இறைவனைப் பார்க்கும் அருளுண்டு. ஆனால் முழுமையாக இல்லை. எப்படிப்பார்ப்போம் என்று அத்தன்மையை விவரிக்கவும் முடியாது. நம்இறைவனின் 'புத்தகம்' இதை நமக்குக் கூறுகிறது.

அந்நாளில் சிலருடைய முகங்கள் மிக்க மகிழ்ச்சியுடையவையாக இருக்கும். (அவை) தங்கள் இறைவனைப் பார்த்த வண்ணமாக இருக்கும். (அல்குர்ஆன் 75:22-23)

அல்லாஹ்வின் நாட்டம் மற்றும் அவனுடைய அறிவிற்கேற்ப சொர்க்க வாசிகள் அல்லாஹ்வைப் பார்ப்பார்கள் என்பது இந்த வசனத்தின் விளக்கமாகும்.

وكلُّ ما جاءَ في ذَلك مِنَ الحديث الصَّحيح عَن الرسولِ صلى الله عليه وآله وسلم فهو كما قال، وَمَعناهُ على ما أراد،

இது குறித்து இறைத் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து ஸஹீஹான ஹதீஸ்களில் வந்துள்ளவை அனைத்தும் அவர்கள் கூறியது போன்றுதான். அவற்றினுடைய கருத்தும் அவர்கள் நாடியது போன்றுதான்.

لا نَدْخلُ في ذلك مُتَأَوِّلين بِآرَائنا، ولا مُتَوَهِّمِينَ بأهْوَائنَا، فإنَّهُ مَا

سَلِمِ في دينه إلاَّ مَنْ سَلَّمَ لله عَزَّ وَجَلَّ ولرسُولِهِ صلى الله عليه وآله وسلم، وردَّ علْمَ ما اشْتَبَهَ عَلَيْهِ إلى عَالِمِهِ.

அவற்றில் நமது அறிவுகளைக் கொண்டு மாற்றுக் கருத்துக்களைக் கூறமாட்டோம். நம் மனஇச்சைகளைக் கொண்டு அவற்றைக் கற்பனை செய்ய மாட்டோம்.

அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முற்றிலும் கட்டுப்பட்டு, தனக்குப் புரியாததைப் புரிந்தவரிடம் விட்டு விட்டவர்தான் தமது மார்க்கத்தில் ஈடேற்றம் பெறமுடியும்.

பாடம் 5

மார்க்க ஆதாரங்களை அணுகும் முறை

ولا تَثْبتُ قَدَمُ الإسلام إلاَّ على ظَهْرِ التَّسْليم والاسْتِسْلاَمِ. فَمَنْ رَامَ عِلْمَ مَا حُظِرَ عَنْهُ عِلْمُه، ولم يَقنعْ بالتَّسلِيم فَهْمُهُ، حَجَبَه مَرامُهُ عَنْ خَالِصِ التَّوْحِيد، وصَافِي المعرِفةِ، وصَحيح الإيمانِ؛ فيَتَذَبْذَبُ بينَ الكُفرِ والإيمانِ، والتَّصْدِيقِ والتَّكْذِيبِ، والإقْرارِ والإنكارِ، مُوَسْوَسًا تَائِهًا، شَاكًّا، زائِغًا، لا مُؤْمِنًا مُصَدِّقًا، ولا جَاحداً مُكَذِّباً.

36. ஏற்றுக் கொள்ளுதல், ஒப்புக் கொள்ளுதல், பணிந்து விடுதல் இவற்றின் மூலம்தான் இஸ்லாமை அடையமுடியும். எவற்றை அறிவது தடைசெய்யப்பட்டதோ அதை அறிய முயற்சிப்பவரும் மார்க்கச் செய்திகளை அப்படியே ஏற்றுக் கொண்டு திருப்தி(யான விளக்கம்) அடையாதவரும் தூய்மையான ஏகத்துவத்தை, சுத்தமான ஞானத்தை, சரியான இறைநம்பிக்கையைப் பெறமுடியாது. இத்தகையவர் - இறைநிராகரிப்பு மற்றும் இறை நம்பிக்கை, மெய்ப்பித்தல் மற்றும் பொய்ப்பித்தல், ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் மறுத்தல் இவற்றிலேயே எப்போதும் உழன்று கொண்டு இருப்பார். சந்தேகம் கொண்டவராகவும் குழப்பம் நிறைந்தவராகவும் நிலைதடுமாறியவராகவும் சுற்றிக் கொண்டே இருப்பார். உண்மையென ஏற்றுக்கொண்ட இறை நம்பிக்கையாளராகவும் இருக்க மாட்டார். பொய்ப்பிக்கும் மறுப்பாளராகவும் இருக்கமட்டார். இருநிலைகளுக்கு இடையில் தத்தளித்துக் கொண்டே இருப்பார்.

وَلا يَصحُّ الإيمانُ بالرُّؤْية لأَهْل دارِ السَّلامِ لِمَن اعْتَبَرَهَا مِنْهُم بِوَهْمٍ أَوْ تأَوَّلَهَا بِفَهْمٍ إذْ كانَ تأويلُ الرؤْية وتأويلُ كل مَعْنَى يُضَاف إلى

الرُّبُوبيَّة بِتَرْكِ التَّأْويلِ ولُزوم التَّسْليمِ.

37. மறுமையில் சொர்க்கவாசிகள் அல்லாஹ்வைப் பார்ப்பார்கள் என்பதை எவர் சந்தேகம் கொள்கிறாரோ, அல்லது தம் விளக்கத்திற்கு ஏற்ப அதன் பொருளை மாற்றுகிறாரோ அவருடைய இறைநம்பிக்கை சீராகாது. "அல்லாஹ்வைப் பார்த்தல்" என்பதன் விளக்கமும் இறைவனுடன் இணைக்கப்பட்ட எந்த ஒரு பொருளின் விளக்கமும் விளக்கம் சொல்லாமல் இருப்பதிலும் முழுமையாக ஏற்றுக் கொள்வதிலும்தான் இருக்கிறது.

وعليه دينُ المسْلِمين. ومن لم يَتَوقَّ النَّفْيَ والتشْبِيهَ، زلَّ ولمْ يُصِب التنْزِيهَ. فَإنَّ رَبَّنا جّلَّ وعَلا موصوفٌ بصفاتِ الوحْدَانِيَّةِ، مَنْعُوتٌ بِنُعوتِ الفَرَدَانِيَّةِ، ليسَ في معناهُ أحَدٌ من البَرِيَّةِ.

(மாற்றுக் கருத்தைக் கூறுவதை விட்டுவிட வேண்டும். இறைவனின் கூற்றுக்கு முழுமையாகக் கட்டுப்பட வேண்டும்.) இதுதான் முஸ்லிம்களின் மார்க்கமாகும். யார் மார்க்கச் சான்றுகளை மறுப்பதையும், இறைவனின் தன்மைகளைப் படைப்பினங்களுடன் ஒப்பிடுவதையும் தவிர்க்கவில்லையோ அவர் வழிதவறிவிட்டார்; இறைவனைத் தூய்மைப்படுத்தத் தவறிவிட்டார். கண்ணியமிக்க, மேன்மைமிக்க நம் இறைவனின் தன்மைகள் தன்னிகரற்றவை; ஒப்புவமை அற்றவை; படைப்பினங்களில் எவரும் அவனது தன்மையைப் பெறவில்லை. அவன் தனது உள்ளமையிலும் பண்புகளிலும் ஒருவனாகவும் தனித்தவனாகவும் இருக்கின்றான்.

وتَعالَى عَنِ الحدُودِ والغَاياتِ ، والأرْكانِ والأعْضَاءِ والأدَواتِ ، لا تَحويهِ الجِهَاتُ السِّتُّ كسَائِرِ المُبْتَدَعَاتِ.

38. எல்லைகள், முடிவுகள், தாங்குவதற்குத் தூண்கள், படைப்பினங்களுக்கு ஒப்பான உறுப்புகள், அவயங்கள், துணைச்

சாதனங்கள் இவை அனைத்தையும் விட்டு அவன் மேலானவன். படைக்கப்பட்ட பொருட்களைப்போல ஆறு திசைகள் அவனைச் சூழமுடியாது. (இன்னும் இது போன்ற) புதுமைகள் ஏதும் அவனைத் தனது கட்டுக்குள் கொண்டு வரமுடியாது.

பாடம் 6

நபி ஸல் அவர்களின் சிறப்புகள்

மிஃராஜ்

والمِعْرَاجُ حقٌّ، وقَدْ أُسْرِيَ بالنَّبِيِّ صلى الله عليه وآله وسلم، وَعُرِجَ بِشَخْصِهِ فِي اليَقَظَةِ إلى السَّماءِ، ثُمَّ إلى حيث شاءَ الله مِنَ العُلا، وأَكْرَمَهُ الله بِمَا شَاءَ، وأوْحَى إلَيْهِ مَا أَوْحَى مَا كَذَبَ الْفُؤَادُ مَا رَأَى [النجم:١١]. فَصَلَّى الله عَلَيْهِ وسَلَّمَ فِي الآخِرَةِ والأُولَى.

39. நபி ﷺ, மிஃராஜ் எனும் ஆகாயப் பயணம் சென்றது உண்மை. நபியவர்களை இரவில்தான் அழைத்துச் செல்லப்பட்டது. அவர்களது உடலுடன் விழித்த நிலையில் வானத்திற்கு அவர்கள் ஏற்றப்பட்டார்கள். பிறகு, அங்கிருந்து உயரத்தில் அல்லாஹ் நாடிய அளவு வரை அழைத்துச் செல்லப்பட்டார்கள். அல்லாஹ் தான் நாடியதைக் கொண்டு அவர்களைக் கண்ணியப்படுத்தினான். அவன் அவர்களுக்கு பல செய்திகளை 'வஹ்யி' மூலம் அறிவித்தான்.

அல்லாஹ்கூறுகிறான்: உள்ளம் தான் பார்த்தவற்றில் பொய்யுரைக்க வில்லை. (அல்குர்அன் 53:11)

இவ்வுலகத்திலும் மறுமையிலும் அல்லாஹ் தன் சிறப்பிற்குரிய அருளையும் வெற்றியையும் அவர்களுக்கு வழங்கட்டும்.

நீர்த்தடாகம்

والحوْضُ الذِي أكرَمَهُ الله تعالَى به -غِيَاثاً لأُمَّتِهِ- حَقٌّ.

40. மறுமையில் நபியவர்களுக்கு அவர்களுடைய உம்மத்தை

இரட்சிப்பதற்காக அல்லாஹ் வழங்கிய நீர்த் தடாகம் உண்மையே.

பரிந்துரை

والشفَاعَةُ التي ادَّخَرَهَا لَهُم حَقٌّ، كما رُوِيَ في الأَخْبارِ.

41. மறுமையில் தம் உம்மத்திற்காக பரிந்துரை செய்யும் தகுதி நபியவர்களுக்கு உண்டு என்பது ஹதீஸ்களில் அறிவிக்கப்பட்டது போன்று உண்மையே.

பாடம் 7

ஒப்பந்தம்

والميثاقُ الذي أَخَذَهُ اللهُ تعالَى مِنْ آدمَ وذُرِيَّتِهِ حَقٌّ.

42. ஆதமிடமிருந்தும் அவருடைய சந்ததிகளிடமிருந்தும் அல்லாஹ் எடுத்த ஒப்பந்தம் உண்மையே.

பாடம் 8

அல்லாஹ்வின் விதி

وقَدْ عَلِمَ اللهُ تعالَى فيما لم يزلْ عَدَدَ مَنْ يَدْخُلُ الجَنَّةَ، وعَدَدَ مَنْ يَدْخُلُ النارَ جُمْلَةً وَاحِدَةً، فَلا يزْدَادُ في ذلك العَدَدُ، ولا يَنقُصُ مِنْهُ.

43. சொர்க்கத்தில் நுழைபவர்களின் எண்ணிக்கை, நரகத்தில் நுழைபவர்களின் எண்ணிக்கை ஆகிய அனைத்தையும் அல்லாஹ் முன்கூட்டியே அறிந்திருக்கின்றான். அந்த எண்ணிக்கையில் கூடுதலும் இருக்காது; குறைவும் இருக்காது.

وَكَذَلك أَفْعالُهم فيمَا عَلِمَ مِنْهُم أَنْ يفْعلُوه، وكُلٌّ مُيَسرٌ لما خُلِقَ لَه، والأَعْمَالُ بالخواتيمِ، والسَّعِيدُ مَنْ سَعِدَ بقضَاءِ اللهِ، والشَّقِيُّ مَنْ شَقِيَ بِقَضَاءِ اللهِ.

44. இவ்வாறே படைப்பினங்கள் எதைச் செய்வார்கள் என்பதையும் அவன் முன்கூட்டியே அறிந்திருக்கின்றான். ஒவ்வொரு படைப்பும், தான் படைக்கப்பட்ட நோக்கத்தை இலகுவாக அடைந்து கொள்கின்றன. முடிவுகளை வைத்தே செயல்கள் அங்கீகரிக்கப்படுகின்றன; அல்லது

மறுக்கப்படுகின்றன. அல்லாஹ்வுடைய ஏற்பாட்டின்படியே ஒருவர் நல்லவராகிறார். அல்லாஹ்வுடைய ஏற்பாட்டின்படியே ஒருவர் தீயவராகிறார்.

وأصلُ القَدَرِ سِرُّ اللهِ تعالى في خَلْقِهِ، لمْ يَطَّلِعْ عَلى ذَلِك مَلَكٌ مُقرَّبٌ ولا نَبِيٌّ مُرْسَلٌ،

45.விதி, ஏற்பாடு, நிர்ணயம் இவற்றை அல்லாஹ் தன் படைப்பினங்களில் தன்னுடைய இரகசியமாகவே வைத்திருக்கின்றான். இறைவனுக்கு நெருக்கமான வானவரோ அவனால் அனுப்பப்பட்ட தூதரோ அதை அறிந்து கொள்ள முடியாது.

والتَّعمُّقُ والنَّظَرُ في ذٰلكَ ذَرِيعَةُ الخِذْلاَنِ ، وَسُلَّمُ الحِرْمَانِ، ودَرَجَةُ الطُّغْيَانِ،

அவ்விசயத்தில் சிந்திப்பதும், ஆழ்ந்து ஆராய்வதும் இழிவுக்கு வழிவகுக்கும்; இறையருளை இழக்க வைக்கும்; இறைச் சட்ட வரம்புகளை மீறவைக்கும்.

فالحذَرَ كُلَّ الحذَرَ مِنْ ذَلِكَ نَظَراً وفِكْراً وَوَسْوَسَةً،

ஆகவே, அதில் சிந்திப்பது, ஆராய்வது மற்றும் சந்தேகப்படுவதை விட்டு மிகமிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

فإن اللهَ تعالى طَوَى عِلْمَ القَدَرِ عَنْ أنَامِهِ، ونَهَاهُم عَنْ مرامِهِ،

நிச்சயமாக அல்லாஹ் விதியை அறிந்து கொள்வதையும் அது குறித்த அறிவையும் தன் படைப்பினங்களை விட்டு மறைத்து விட்டான். அதன் கருத்துக்களைப் பற்றி கேள்வி கேட்பதைவிட்டு அவர்களை தடுத்து விட்டான்.

كما قال تعالى في كتابه:

لَا يُسْأَلُ عَمَّا يَفْعَلُ وَهُمْ يُسْأَلُونَ [الأنبياء:٢٣]،

அல்லாஹ்கூறுகிறான்:

அவன் செய்வதைப் பற்றி அவன் கேட்கப்பட மாட்டான். அவர்கள் தாம் கேள்வி கேட்கப்படுவார்கள். (அல்குர்ஆன்21:23)

فَمَنْ سَأَلَ: لِمَ فَعَلَ؟ فَقَدْ رَدَّ حُكْمَ الكِتَابِ ؛ وَمَنْ رَدَّ حُكْمَ الكِتَاب كانَ مِنَ الكافِرين.

ஆகவே, இறைவன் ஏன் செய்தான் என்று ஒருவர் கேள்வி கேட்டால் அவர் இறைநூலின் சட்டத்தை ஏற்க மறுத்தவராவார். இறை நூலின் சட்டத்தை யார் மறுத்தாரோஅவர் இறைவனை நிராகரிப்பவர்களில் சேர்ந்து விடுவார்.

فَهَذَا جُمْلَةُ ما يَحْتَاجُ إِلَيْهِ مَنْ هُو مُنَوَّرٌ قَلْبُهُ مِنْ أَوْلياءِ الله تعالى، وهي دَرَجَة الرَّاسِخِينَ في العِلْمِ؛

46. உள்ளம் ஒளி பெற்ற இறைநேசர்கள் அறிந்து கொள்ள வேண்டிய மொத்த செய்திகளைத்தான் இதுவரை நாம் கூறினோம். கல்வியில் தேர்ச்சி பெற்ற உறுதிமிக்க சான்றோர்களின் வழி இதுவே.

لأنَّ العِلْمَ علمَان: عِلْم في الخَلْق مَوْجُودٌ، وَعِلْم في الخَلْقِ مَفْقُودٌ، فإنكارُ العِلْمِ الموْجُودِ كُفْرٌ، وادَّعَاءُ العِلمِ المفقودِ كُفْرٌ،

ஏனெனில் கல்வி இரண்டு வகை. ஒன்று, படைப்பினங்களில் இருக்கின்ற கல்வி. இரண்டாவது படைப்பினங்களில் இல்லாத கல்வி. இருக்கின்ற கல்வியை மறுப்பது இறைநிராகரிப்பை ஏற்படுத்தும்.

அவ்வாறே இல்லாத கல்வியைத் தேடுவதும் இறைநிராகரிப்பை ஏற்படுத்தும்.

ولا يَثْبُتُ الإيمانُ إلا بقَبُولِ العِلمِ الموجودِ،
وترْكِ طَلَبِ العِلْمِ المفْقُودِ.

இருக்கின்ற கல்வியை ஏற்றுக் கொள்வது மற்றும் இல்லாத கல்வியைத் தேடுவதை விட்டுவிடுவது இவற்றின் மூலமே இறைநம்பிக்கை உறுதிபெறும்.

ونُؤْمِنُ باللَّوحِ والقَلَمِ وبِجَميعِ مَا فيه قَدْ رُقِم.

47. பதிவேட்டையும், எழுதுகோலையும், விதியில் எழுதப்பட்ட அனைத்தையும் நாம் நம்பிக்கை கொண்டோம்.

فلَو اجتمعَ الخَلْقُ كلُّهم على شَيْءٍ كتَبَهُ اللهُ تَعالى فِيه أنَّه كَائِنٌ،
لِيجْعَلوهُ غيْرَ كَائِن -لمْ يَقْدِرُوا عَلَيْهِ.

நடக்க வேண்டுமென்று அல்லாஹ் எழுதிய ஒன்றை நடக்காமல் ஆக்குவதற்கு படைப்பினங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்தாலும் அவர்கள் அதற்கு ஆற்றல் பெறமாட்டார்கள்.

ولو اجْتَمَعُوا كُلُّهم عَلى شَيْءٍ لمْ يكْتُبه اللهُ تعالى فيه، أنَّهُ غَيْرُ كَائِنٍ
ليجعلُوهُ كائِناً- لم يقدروا عليه،

அல்லாஹ் முடிவு செய்யாததை நடக்க வைப்பதற்கு, படைப்பினங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தாலும் அதற்கு அவர்கள் ஆற்றல் பெறமாட்டார்கள்.

جَفَّ القَلَمُ بما هُوَ كَائنٌ إلى يَوْمِ القِيامَة، ومَا أَخْطأَ العَبْدُ لمْ يَكُنْ

لِيُصِيبَهُ، وما أَصَابَهُ لَمْ يَكُن لِيُخْطِئَهُ.

உலக முடிவு நாள் வரை நடக்கக்கூடிய அனைத்தையும் எழுதுகோல் எழுதிக் காய்ந்து விட்டது. அடியானுக்குத் தவறிய ஒன்றை அவன் பெறமுடியாது. அவனுக்கு கிடைத்ததை அவன் தவற விட்டிருக்கவும் முடியாது.

وذٰلكَ مِنْ عَقْدِ الإيمَانِ، وأُصُولِ المعْرِفَةِ، والاعْترافِ بتوْحيدِ الله تعالى ورُبُوبِيَّتِهِ،

كما قالَ تعالى في كتابهِ وَخَلَقَ كُلَّ شَيْءٍ فَقَدَّرَهُ تَقْدِيرًا [الفرقان:٢]

48. (தனது படைப்பினங்களில் நடக்கக்கூடிய, நிகழக்கூடிய அனைத்தையும் அல்லாஹ் முன்கூட்டியே அறிவித்து விட்டான். அல்லாஹ் அனைத்தையும் தெளிவாக, உறுதியாக, முடிவாக நிர்ணயித்து விட்டான். அவற்றை முறிப்பவர் எவருமில்லை; பிற்படுத்துபவர் எவருமில்லை; நீக்குபவர் எவருமில்லை; மாற்றுபவர் எவருமில்லை. வானங்களிலும் பூமியிலும் அவனுடைய படைப்பினங்களில் எதுவும் குறையவும் முடியாது; கூடவும் முடியாது என்று அடியான் உறுதியான நம்பிக்கையுடன் அறிந்து கொள்ள வேண்டும்.) இவையே இறைநம்பிக்கையின் கொள்கையாகும்; இறை அறிவின் அடிப்படையாகும்; அல்லாஹ்வே வணங்கத் தகுதியானவன். அவனே படைத்து, வளர்த்துக் காப்பவன் என்பதை ஏற்றுக் கொள்வதின் உண்மை நிலையாகும்.

அல்லாஹ் தனது புத்தகத்தில் கூறுகின்றான்: அவன் ஒவ்வொன்றையும் படைத்தான். அவற்றை முறையாக நிர்ணயம் செய்தான். (அல்குர்ஆன் 25:2)

وقال تعالى وَكَانَ أَمْرُ اللَّهِ قَدَرًا مَقْدُورًا [الأحزاب:٣٨].

மேலும் அவன் கூறுகின்றான்: அல்லாஹ்வுடைய காரியம் நிர்ணயிக்கப்பட்ட விதியாக இருக்கிறது. (அல்குர்ஆன் 33:38)

فَوَيْلٌ لمنْ صَارَ للهِ تعالى في القَدَرِ خَصِيمًا، وأَحْضَرَ للنَّظَرِ فيهِ قَلْباً سقيماً، لَقد الْتَمَسَ بوهْمِهِ في فَحْصِ الغَيْبِ سِرًّا كَتِيماً ، وَعادَ بما قالَ فيهِ أَفَّاكاً أَثِيماً.

விதியில் அல்லாஹ்வுடன் தர்க்கிப்பவருக்கு நாசம் உண்டாகட்டும்! அதில் சிந்திப்பதற்கு தன் நோயுற்ற உள்ளத்தை ஈடுபடுத்தியவன் நாசமாகட்டும்! இத்தகையவன் மறைவை (கைபை)ப் புரிந்து கொள்வதில் தனது யூகத்தைப் பயன்படுத்தி மறைக்கப்பட்ட ஓர் இரகசியத்தைத் தேடிவிட்டான். அது பற்றி அவன் பேசிய காரணத்தால் பெரும் பொய்யனாகவும் பாவியாகவும் மாறிவிட்டான்.

பாடம் 9

அல்லாஹ்வுடைய அர்ஷ்

والعرشُ والكرسيُّ حَقٌّ.

49. மேலும் அர்ஷ் (கட்டில்) குர்ஸி (பாத தளம்) உண்மையே.

وهُوَ مُسْتَغْنٍ عَن العرشِ ومَا دُونَه.

50. அவன் "அர்ஷ்" மற்றும் அதற்குக் கீழுள்ள அனைத்தையும் விட்டு தேவையற்றவன்.

مُحِيطٌ بِكُلِّ شَيْءٍ وفَوْقَهُ، وقَدْ أعْجَزَ عَنِ الإحَاطَةِ خَلْقَهُ.

51. அவன் அனைத்தையும் சூழ்ந்திருக்கிறான். அனைத்திற்கும் மேலாக இருக்கிறான். தன்னை அறிவதைவிட்டு படைப்பினங்களைப் பலவீனப்படுத்தி விட்டான்.

பாடம் 10

அல்லாஹ்வின் நட்பும் பேச்சும்

ونَقُولُ: إنَّ اللهَ اتَّخَذَ إِبْرَاهِيمَ خَلِيلاً، وكَلَّمَ الله مُوسى تكْلِيماً، إِيمَاناً وتَصْدِيقاً وتَسْلِيماً.

52. "நிச்சயமாக அல்லாஹ் இப்றாஹீமை (அலை) நண்பனாக எடுத்துக் கொண்டான். மூசா (அலை) உடன் பேசினான் என்று நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம்; உண்மையென ஏற்றுக் கொள்கிறோம்; ஒப்புக் கொள்கிறோம்.

பாடம் 11

இறை நம்பிக்கையின் அம்சங்கள்

ونؤْمنُ بالملائكَةِ والنَّبيين والكُتُبِ المُنَزَّلَةِ عَلى المرْسَلينَ ونَشْهَدُ أَنَّهُم كانوا على الحَقِّ المبين.

53. வானவர்கள், நபிகள் மற்றும் ரசூல்கள் மீது இறக்கப்பட்ட புத்தகங்களை நம்பிக்கை கொள்கிறோம். அவர்கள் அனைவரும் தெளிவான சத்தியத்தின் மீது இருந்தார்கள் என்று சாட்சி கூறுகின்றோம்.

பாடம் 12

முஸ்லிம்களை ஏற்றுக் கொள்வது

ونُسمِّي أَهْلَ قِبْلَتِنَا مُسْلِمينَ مؤمِنينَ، مَا دَامُوا بِمَا جَاءَ بِهِ النَّبِيُّ صلى

اللهُ عليه وعلى آله وسلم مُعْتَرِفِينَ، ولهُ بِكُلِّ ما قالَ وأَخْبَرَ مُصَدِّقِين.

54. நம்முடைய கிப்லாவை ஏற்றுக் கொண்டவர்களை முஸ்லிம், முஃமின் என்று கூறுகிறோம். இறைத் தூதர் கொண்டுவந்த அனைத்தையும் ஏற்பவர்களாகவும்; கூறியவற்றை உண்மைப்படுத்துபவர்களாகவும் அவர்கள் இருக்கின்ற வரை முஸ்லிம், முஃமின் என்ற பெயர் அவர்களுக்கு நீடிக்கும்.

ولا نُكَفِّرُ أَحَداً مِنْ أَهْلِ القِبْلَةِ بِذَنْبٍ، مَا لَمْ يَسْتَحِلَّهُ

57. கிப்லாவை ஏற்றுக் கொண்ட எவரையும் அவரிடமுள்ள பாவத்தின் காரணமாக அவர் அதை ஆகுமானது என்று கூறாதவரை அவரைக் காஃபிர் (இறை மறுப்பாளர்) என்று கூறமாட்டோம்.

وَلا نَقُولُ: لا يَضُرُّ مَعَ الإِيمَانِ ذَنْبٌ لمنْ عَمِلَه.

58. இறைநம்பிக்கை கொண்டதற்குப் பிறகு ஒருவர் பாவம் செய்தால் அதனால் அவருக்கு எந்தத் தீங்கும் (ஈமானில் குறைவும்) நிகழாது என்று நாம் கூறமாட்டோம்.

نَرْجُو للمُحْسِنِينَ مِنَ المؤْمِنِينَ أَنْ يَعْفُوَ عَنْهُم ويُدْخِلَهم الجَنَّة بِرَحْمَتِهِ، ولا نَأْمَنُ عَلَيْهِم، ولا نَشْهدُ لهم بالجَنَّة، ونَستَغْفرُ لِمُسِيئهِم، ونَخَافُ عَلَيْهِم، ولا نُقَنِّطُهُم.

59. இறைநம்பிக்கையாளர்களில் நன்மை செய்பவர்களை தனது கருணையால் அல்லாஹ் மன்னித்து சொர்க்கத்தில் நுழைவிப்பான் என்று ஆதரவு வைக்கிறோம். மேலும், அவர்கள் மீது அச்சமற்று நாம் இருக்க மாட்டோம். அவர்களுக்கு நிச்சயம் சொர்க்கம் உண்டு என்று நாம் சாட்சி கூறமாட்டோம். அவர்களில் குற்றம் இழைக்காதவர்களுக்காக மன்னிப்புக் கேட்போம். அவர்கள் மீது நாம்

பயப்படுகிறோம். அல்லாஹ்வின் கருணையைவிட்டு அவர்களை நாம் நிராசையடையச் செய்யமாட்டோம்.

والأَمْنُ والإِياسُ يَنْقُلاَنِ عَنْ مِلَّةِ الإسْلاَمِ، وَسَبِيلُ الحقِّ بَيْنَهُما لأهلِ القِبْلَةِ.

60. அச்சமற்று இருத்தல், நிராசையடைதல் இவ்விரண்டும் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டு வெளியேற்றிவிடும். கிப்லாவை ஏற்றுக் கொள்பவர்களுக்கு (-முஸ்லிம்களுக்கு) இவ்விரண்டிற்குமிடையில் இருப்பதுதான் சத்தியப் பாதையாகும்.

ولا يَخْرُجُ العبْدُ مِنَ الإيمَانِ إلا بجُحُودِ ما أَدْخَلَهُ فيه.

61. ஒருவர் எதை ஏற்று இறைநம்பிக்கையாளராக மாறினாரோ அதை மறுப்பதன் மூலமே அவர் இறைநம்பிக்கையிலிருந்து வெளியேறுவார்.

والإيمانُ: هو الإقْرارُ باللِّسانِ، والتصديقُ بالجَنَانِ. (١)

62. ஈமான் (இறைநம்பிக்கை) என்பது நாவால் ஏற்றுக் கொள்ளுதல்; உள்ளத்தால் உண்மைப்படுத்துதல்; (செயல்களால் உறுதிபடுத்துதல்) ஆகும்.

பாடம் 13

தர்க்கம் செய்தல் கூடாது

ولا نَخُوضُ في اللّٰه، ولا نُمارِي في دين اللّٰه.

55. அல்லாஹ்வின் உள்ளமையைப் பற்றி நாம் பேசமாட்டோம். அல்லாஹ்வின் மார்க்கத்தில் நாம் குதர்க்கம் செய்யமாட்டோம்.

ولا نُجَادِلُ في القرآنِ، ونَشْهدُ أَنَّهُ كَلاَمُ ربِّ العالمينَ، نَزَلَ به الروحُ الأَمِينُ، فَعَلَّمَهُ سيِّدَ المرسلين مُحَمَّداً صلى اللّٰه عليه وعلى آله وسلم، وهو كَلامُ اللّٰه تعالى لا يساويه شيءٌ مِنْ كلامِ المخْلُوقِين، ولا نَقُولُ بِخَلْقِهِ، وَلا نُخَالِفُ جَمَاعَةَ المسْلِمينَ.

56. அல்குர்ஆனில் தர்க்கிக்க மாட்டோம். அது அகிலங்களின் இறைவனுடைய பேச்சு என்று நாங்கள் சாட்சி கூறுகின்றோம். அதை நம்பிக்கைக்குரிய வானவர் கொண்டு வந்தார். அவர் தூதர்களின் தலைவரான முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அதைக் கற்றுக் கொடுத்தார். அது அல்லாஹ்வின் பேச்சாகும். படைப்பினங்களின் பேச்சுகளில் எதுவும் அதற்குச் சமமாகவோ நிகராகவோ ஈடாகவோ முடியாது. அது படைக்கப்பட்ட ஒன்று என்று நாம் கூறமாட்டோம். முஸ்லிம்களின் கூட்டத்திற்கு நாம் முரண்பட மாட்டோம்.

وَجَمِيعُ ما صَحَّ عَنْ رَسُولِ اللّٰه صلى اللّٰه عليه وعلى آله وسلم مِنْ الشَّرْعِ والبَيانِ كُلّهُ حَقٌّ.

63. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் புறத்திலிருந்து சரியான ஆதாரத்துடன் நமக்குக் கிடைத்த மார்க்கமும் அதன் அனைத்து விளக்கமும் உண்மையே.

பாடம் 14

ஈமான் - இறைநம்பிக்கை

وَالإيمانُ وَاحِدٌ، وأَهْلُهُ في أَصْلِهِ سَواءٌ، والتَّفَاضُلُ بَيْنَهُم بالخَشْيَةِ والتُّقَى، ومُخَالَفَةِ الهَوَى، ومُلازَمَةِ الأُولى.

64. ஈமான்-இறைநம்பிக்கை என்பது ஒன்றே. இறைநம்பிக்கையாளர்கள் அனைவரும் இறைநம்பிக்கையின் அடிப்படைகளில் சமமானவர்களே! அல்லாஹ்வை அஞ்சுதல், மார்க்கச் சட்டங்களைப் பேணுதல், மனஇச்சைக்கு மாறுசெய்தல், நன்மைகளை அதிகமாகவும் தொடர்ந்தும் செய்தல் இவற்றின் மூலமாகவே அவர்களுக்கு மத்தியில் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது.

والمؤمنُونَ كُلُّهُم أَولِيَاءُ الرَّحْمنِ، وأَكْرَمُهُم عِنْدَ اللهِ أَطْوَعُهُم وَأَتْبَعُهُم لِلقُرْآنِ.

65. இறைநம்பிக்கையாளர்கள் அனைவரும் ரஹ்மானுடைய நேசர்களே. அவர்களில் அல்லாஹ்விடம் அதிகம் கண்ணியத்திற்குரியவர், அவர்களில் அல்லாஹ்விற்கு அதிகம் பணிந்து நடப்பவரும் குர்ஆனை அதிகம் பின்பற்றுபவருமே ஆவார்.

والإيمانُ: هُو الإيمانُ باللهِ، وَمَلائِكَتِهِ، وَرُسُلِهِ، واليومِ الآخِرِ، وَالقَدَرِ: خَيْرِهِ وشَرِّهِ، وحُلْوِهِ وَمُرِّهِ، مِنَ اللهِ تَعالَى.

66. இறைநம்பிக்கை (ஈமான்) என்பது அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய புத்தகங்களையும், அவனுடைய தூதர்களையும், மறுமை நாளையும், விதியையும் நம்பிக்கை கொள்வதாகும். மேலும் அதிலுள்ள நன்மையும் தீமையும்,

இனிப்பும் கசப்பும் அல்லாஹ்வின் புறத்திலிருந்தே என்று நம்பிக்கை கொள்வதாகும்.

وَنَحْنُ مُؤْمِنُون بِذَلكَ كُلِّهِ، لاَ نُفَرِّقُ بَيْنَ أَحَدٍ مِنْ رُسُلِهِ، ونُصَدِّقُهُم كُلَّهُم عَلَى مَا جَاءوا به.

67. நாம் இவை அனைத்தையும் நம்பிக்கை கொள்கிறோம். இறைவனுடைய தூதர்களில் எவரையும் பிரிக்க மாட்டோம். அவர்களுக்கு மத்தியில் பாகுபாடு காட்டமாட்டோம். ஒருவரை ஏற்று மற்றவரை மறுக்கமாட்டோம். அவர்கள் கொண்டுவந்த அனைத்தையும் ஏற்று அவர்களை உண்மைப்படுத்துவோம்.

பாடம் 15

பெரும் பாவம் செய்தவர்கள்

وَأَهْلُ الكَبَائِرِ «مِنْ أُمَّةِ مُحَمَّدٍ صلى الله عليه وعلى آله وسلم» فِي النَّارِ لا يُخَلَّدُون، إِذَا مَاتُوا وهُمْ مُوَحِّدُونَ، وإِنْ لم يَكُونُوا تَائِبِينَ، بَعْدَ أَنْ لَقُوا اللَّهَ عَارِفِينَ «مُؤْمِنِينَ» وَهُمْ فِي مَشِيئَتِهِ وحُكْمِهِ، إِنْ شَاءَ غَفَرَ لَهُمْ وَعَفَا عَنْهُم بِفَضْلِهِ،

68. முஹம்மது (ஸல்) அவர்களுடைய சமுதாயத்தில் பெரும்பாவம் செய்தவர்கள் அல்லாஹ்வை மட்டும் வணக்கத்திற்குரியவனாக ஏற்றுக் கொண்டு, இணைவைக்காமல் மரணித்தால் நரகத்தில் நிரந்தரமாக தங்கமாட்டார்கள். அவர்கள் மன்னிப்புத் தேடாமல் இருப்பினும் சரியே. அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவர்களாகவும் அவனை அறிந்தவர்களாகவும் மரணித்திருக்க வேண்டும் என்பது நிபந்தனை. இத்தகையவர்களை அல்லாஹ் தன்னுடைய நாட்டத்திற்கும் ஞானத்திற்கும் ஏற்ப நடத்துவான். அவன் நாடினால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி பாவங்களை அகற்றிவிடுவான்.

كما ذَكَرَ عَزَّ وَجَلَّ فِي كتابِهِ: وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَنْ يَشَاءُ

[النساء:٤٨]

அல்லாஹ் குறிப்பிடுகிறான்:

நிச்சயமாக அல்லாஹ் அவனுக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்க மாட்டான். அதைத் தவிர மற்றவற்றை அவன் நாடியவருக்கு மன்னித்து விடுவான். (அல்குர்ஆன் 4:48)

وَإِنْ شَاءَ عَذَّبَهُم فِي النَّارِ بعَدْلِهِ، ثُمَّ يُخْرِجَهُم مِنْهَا بِرَحْمَتِه وَشَفَاعَةِ

الشَّافِعِينَ مِن أَهْلِ طَاعَتِه، ثُمَّ يَبْعَثُهُم إلى جَنَّتِه، وَذَلِكَ بِأن الله تعالى تَوَلَّى أَهْلَ مَعْرِفتِهِ، وَلَمْ يَجْعَلَهُم في الدَّارَيْنِ كَأَهْلِ نُكْرَتِهِ، الذينَ خَابُوا مِنْ هِدَايَتِهِ، ولمْ يَنَالُوا مِنْ وِلاَيَتِهِ.

அவன் நாடினால் அவனுடைய நீதியின் அடிப்படையில் அவர்களை நரகத்தில் வேதனை செய்வான். பிறகு தன்னுடைய கருணையாலும் தன் நேசர்களின் பரிந்துரையாலும் அவர்களை அதிலிருந்து வெளியேற்றி, சொர்க்கத்திற்கு அனுப்புவான். அல்லாஹ் தன்னுடைய ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டவர்களை தன்னை அறியாதவர்களைப் போன்று ஈருலகிலும் ஆக்கிவிட மாட்டான். அவர்கள் அல்லாஹ்வின் நேர்வழி கிடைக்காமல் நஷ்டமடைந்தார்கள். அல்லாஹ்வின் நேசத்தையும் அவர்கள் பெறவில்லை.

اللَّهُمَّ يا وَلِيَّ الإسْلاَمِ وَأَهْلِهِ، ثَبِّتْنَا عَلَى الإسْلامِ حَتَّى نَلْقَاكَ به.

அல்லாஹ்வே! இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் பாதுகாவலனே! நாங்கள் உன்னை இஸ்லாமுடன் சந்திக்கும் வரை அதன் மீது எங்களை உறுதிப்படுத்துவாயாக!

பாடம் 16

பிரிவினைகள் பிளவுகள் ஏற்படுத்த மாட்டோம்

وَنَرَى الصَّلاةَ خَلْفَ كُلِّ بَرٍّ وَفَاجِرٍ مِنْ أَهْلِ القِبْلَةِ، وَعَلَى مَنْ مَاتَ مِنْهُم.

69. கிப்லாவை ஏற்றுக் கொண்ட நல்லோர் - தீயோர் எவர் தொழுகையை நடத்தினாலும் அவர்களுக்குப் பின் தொழவேண்டும்; அவர்களில் எவர் மரணித்து விட்டாலும் அவருக்குத் தொழுகை நடத்த வேண்டும் என்று நாம் கருதுகிறோம்.

وَلاَ نُنَزِّلُ أَحَداً مِنْهُم جَنَّةً ولا ناراً، ولاَ نَشْهَدُ عَلَيْهِم بِكُفْرٍ وَلا بشِرْكٍ وَلا بِنفَاقٍ، مَا لَمْ يَظْهَرْ منْهُم شَيْءٌ مِنْ ذَلك، وَنَذَرُ سَرَائِرَهُم إلى الله تعالى.

70. அவர்களில் எவரையும் சொர்க்கத்திற்குரியவர் அல்லது நரகத்திற்குரியவர் என்று கூற மாட்டோம். அவர்களிடம் இறைநிராகரிப்பு, இணைவைத்தல், நயவஞ்சகம் போன்றவை வெளிப்படாமல் இருக்கும்போது அக்குற்றங்களை அவர்கள் மீது சுமத்த மாட்டோம். அவர்களின் இரகசியங்களை அல்லாஹ்விடமே ஒப்படைத்து விடுவோம்.

பாடம் 17

உம்மத்துக்கு எதிராக வாள் ஏந்துவதையும் ஆட்சியாளர்களை எதிர்ப்பதையும் தவிர்ப்போம்

وَلا نَرَى السَّيْفَ عَلى أَحَدٍ مِنْ أُمَّةِ مُحَمَّدٍ صلى الله عليه وعلى آله وسلم إِلاَّ مَنْ وَجَبَ عَلَيْهِ السَّيْفُ.

71. முஹம்மது (ஸல்) அவர்களுடைய சமுதாயத்தில் யாருக்கும் எதிராக வாள் ஏந்துவது ஆகுமானது என நாங்கள் கருதமாட்டோம். ஆனால் மார்க்க முறைப்படி அது விதியாகிவிட்டவரைத் தவிர.

وَلاَ نَرَى الخُرُوجَ عَلى أَئِمتِنَا وَوُلاَةِ أُمُورِنَا وَإِنْ جَارُوا، وَلاَ نَدْعُو عَلَيْهِم، وَلاَ نَنْزَعُ يَداً مِنْ طَاعَتِهم، وَنَرى طَاعَتَهُم مِنْ طَاعَةِ اللهِ عَزَّ وَجَلَّ فَرِيضة، مَا لَمْ يَأْمُروا بِمَعْصِيَةٍ، وَنَدْعُوا لَهُم بِالصَّلاحِ والمعَافَاةِ.

72. நம்முடைய ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகள் அநீதி இழைத்தாலும் அவர்களுக்கு எதிராகப் புரட்சி செய்வது ஆகுமானது என நாம் கருதமாட்டோம். அவர்களுக்கு எதிராக பிரார்த்திக்க மாட்டோம். அவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதைவிட்டு விலகமாட்டோம். அவர்கள் இறைவனுக்கு மாறு செய்யும்படி கட்டளையிடாத வரை அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பது அல்லாஹ்விற்கு கீழ்ப்படிய வேண்டிய கடமையாக நாம் கருதுகிறோம். அவர்கள் சீர்திருத்தவும் குழப்பங்களை விட்டுப் பாதுகாப்புப் பெறவும் நாம் பிரார்த்திப்போம்.

பாடம் 18

நமது நிலைப்பாடு

وَنَتَّبِعُ السُّنَّةَ والجَمَاعةَ، وَنَجْتَنِبُ الشُّذُوذَ والخِلاَفَ والفُرْقَةَ.

73. சுன்னா என்னும் நபிவழியையும் அதைச் சார்ந்த கூட்டத்தினரையும் நாம் பின்பற்றுவோம். தனித்துச் செல்லுதல், முரண்படுதல், பிளவுபடுதல் ஆகியவற்றைவிட்டு விலகிக் கொள்வோம்.

وَنُحِبُّ أَهْلَ العَدْلِ والأَمَانَةِ، ونَبْغَضُ أَهْلَ الجَوْرِ والخِيَانَةِ.

74. நீதி மற்றும் நேர்மையுடையோரை நேசிப்போம். அநீதி மற்றும் மோசடி செய்வோரை வெறுப்போம்.

وَنَقُولُ: اللهُ أَعْلَمُ، فيما اشْتَبَهَ عَلَيْنَا عِلْمُه.

75. நம்முடைய அறிவால் புரிந்துகொள்ள முடியாத செய்திகள் குறித்து, "அல்லாஹ் மிக அறிந்தவன்" என்று கூறுவோம்.

وَنَرَى المَسْحَ عَلى الخُفَّيْنِ، في السَّفَرِ والحَضَرِ، كَما جَاءَ في الأَثَرِ.

76. நபிமொழிகளில் வந்திருப்பது போன்ற (ஒளு செய்பவர்) உள்ளூரிலும் வெளியூரிலும் காலுறைக்கு 'மஸ்ஹ்' - தண்ணீரால் தடவுவதை ஆகுமானதாகக் கருதுகிறோம்.

பாடம் 19

ஹஜ்ஜையும் ஜிஹாதையும் விடமாட்டோம்

وَالحَجُّ والجِهَادُ مَاضِيَانِ مَعَ أُولي الأَمْرِ مِنَ المسْلِمينَ: بَرِّهِم وفَاجِرِهِم، إلى قِيَامِ السَّاعَةِ، لا يُبْطِلُهُمَا شَيْءٌ ولاَ يَنْقُضُهُمَا.

77. முஸ்லிம் தலைவர்கள் அவர்கள் நல்லோராக அல்லது தீயோராக இருப்பினும் சரியே. அவர்கள் தலைமையில் ஹஜ்ஜுக்குச் செல்வது மற்றும் ஜிஹாது செய்வது இறுதிநாள் வரை தொடர வேண்டும். அவ்விரண்டையும் எதுவும் அகற்றிவிட முடியாது; நீக்கிவிட முடியாது.

பாடம் 20

வானவர்கள்

وَنؤْمِنُ بالكِرَامِ الكَاتِبينَ، فَإِنَّ اللّٰهَ قَدْ جَعَلَهُم عَلَيْنَا حَافِظِين.

78. செயல்களைப் பதிவு செய்கின்ற கண்ணியத்திற்குரிய வானவர்களை நம்பிக்கை கொள்கிறோம். அல்லாஹ், நம்மைக் கண்காணிப்பவர்களாக அவர்களை ஆக்கியிருக்கின்றான்.

وَنُؤْمِنُ بِمَلِكِ المَوْتِ، الموكَّلِ بِقَبْضِ أَرْوَاحِ العَالَمِينَ.

79. அகிலத்தார்களின் உயிர்களைக் கைப்பற்றுவதற்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்ட ‘மலக்குல் மவ்த்’தை நம்பிக்கை கொள்கிறோம்.

பாடம் 21

கப்ர் - மண்ணறை

وَبِعَذَابِ القبْرِ لمنْ كَانَ لَهُ أَهْلاً، وسُؤَالِ مُنْكَرٍ ونَكِيرٍ في قبْرِه عَنْ رَبِّهِ وَدِينِهِ وَنَبِيِّهِ، عَلَى مَا جَاءَتْ بِهِ الأَخْبَارُ عنْ رَسُولِ اللّٰه صلى اللّٰه عليه وعلى آله وسلم، وَعن الصَّحَابَةِ رضْوَانُ اللّٰهِ عَلَيْهِم.

80. மண்ணறையில் வேதனைக்குரியவர்களுக்கு வேதனையுண்டு. முன்கர், நகீர் ஆகிய இருவர் மண்ணறையில் இறைவன், மார்க்கம் மற்றும் தூதர் குறித்து விசாரிப்பார் என்று நம்பிக்கை கொள்கிறோம். இது குறித்து நபிமொழிகளும் நபித்தோழர்களின் கூற்றுகளும் ஏராளம் வந்துள்ளன.

وَالقَبْرُ رَوْضَةٌ مِنْ رِيَاضِ الجنَّةِ، أَوْ حُفْرَةٌ مِنْ حُفَرِ النِّيرَانِ.

81. மண்ணறை (கப்ரு) சொர்க்கப் பூங்காக்களில் ஒரு பூங்காவாக இருக்கும்; அல்லது நரக நெருப்புக் குழிகளில் ஒரு குழியாக இருக்கும்.

பாடம் 22

மறுமை வாழ்க்கை

وَنُؤْمِنُ بِالبَعْثِ وَجَزَاءِ الأَعْمَالِ يَوْمَ القِيَامَةِ، والعَرْضِ والحِسَابِ،
وقِرَاءَةِ الكِتَابِ، والثَّوابِ والعِقَابِ، والصِّرَاطِ والمِيزَانِ.

82. மறுமையில் எழுப்பப்படுதல், செயல்களுக்கு கூலி வழங்குதல், சமர்ப்பிக்கப்படுதல், விசாரிக்கப்படுதல், புத்தகத்தைப் படித்தல், கூலி வழங்குதல், பாலம், தராசு இவை அனைத்தையும் நம்பிக்கை கொண்டோம்.

وَالجَنَّةُ والنَّارُ مَخْلُوقَتَانِ، لا تَفْنَيَانِ أَبَداً وَلاَ تَبِيدَانِ، فَإِنَّ اللهَ تعالى خَلَقَ الجَنَّةَ والنَّارَ قَبْلَ الخَلْقِ، وَخَلَقَ لَهُمَا أَهْلاً، فَمنْ شَاءَ مِنْهُم إلى الجَنَّةِ فَضْلاً مِنْهُ. وَمَنْ شَاءَ مِنْهُم إلى النَّارِ عَدْلاً مِنْهُ، وَكُلٌّ يَعْمَلُ لما قَدْ فُرِغَ لَهُ، وَصَائِرٌ إلى مَا خُلِقَ لَهُ.

83. சொர்க்கம், நரகம் இரண்டும் படைக்கப்பட்டுள்ளன. இவை அழியாதவை படைப்பினங்களைப் படைப்பதற்கு முன்பாகவே அல்லாஹ் சொர்க்கத்தையும் நரகத்தையும் படைத்து விட்டான். சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் உரியவர்களையும் அவன் படைத்திருக்கின்றான். தான் நாடியவர்களை நீதியின் அடிப்படையில் நரகத்தில் நுழையச் செய்கிறான். ஒவ்வொருவரும் தமக்கு இறைவன் எழுதி முடித்ததை நோக்கியே செயல்படுகிறார்; தாம் படைக்கப்பட்ட இலக்கை நோக்கியே சென்று கொண்டிருக்கிறார்.

பாடம் 23

மனிதனும் விதியும்

والخَيْرُ والشَّرُّ مُقدَّرَانِ عَلى العِبَادِ.

84. நன்மையும் தீமையும் அடியார்கள் மீது விதிக்கப்பட்டு விட்டன.

والاسْتِطاعَةُ التي يَجبُ بِهَا الفِعْلُ، مِنْ نَحْوِ التَّوفيقِ الَّذِي لا يَجُوزُ أَنْ يُوصَفَ المخْلُوقُ بِهِ -فهي مَعَ الفِعْلِ، وأَمَّا الاسْتِطاعَةُ مِنْ جِهَةِ الصِّحةِ وَالوُسْعِ، والتَّمكينِ وَسَلاَمَةِ الآلاتِ- فَهِيَ قَبْلَ الفِعْلِ، وَبِهَا يَتَعَلَّقُ الخِطَابُ، وهُوَ كَمَا قال تعالى ﴿لَا يُكَلِّفُ اللهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا﴾ [البقرة:٢٨٦].

85. ஒரு செயலைச் செய்வதற்குரிய ஆற்றல் அச்செயலுடன் இருக்கிறது. நற்செயலைச் செய்வதற்கு இறைவன் வழங்குகின்ற நல்லருள் இவ்வகையைச் சேர்ந்ததே. உடல் சுகம், ஆற்றல், அச்செயலைச் செய்வதற்குரிய சக்தி, அதற்குரிய காரணங்கள் இலகுவாகுவது - இவை அனைத்தும் அச்செயலுக்கு முன்பாக இருக்கும் இவற்றை வைத்துத்தான் இறைவனின் கட்டளை ஒருவர் மீது கடமையாகிறது.

அல்லாஹ் கூறுகின்றான்:

எந்த ஓர் ஆத்மாவையும் அதன் சக்திக்கு உட்பட்டே தவிர அல்லாஹ் கட்டளையிடுவதில்லை. (அல்குர்ஆன் 2:286)

وَأَفْعَالُ العِبَادِ خَلْقُ اللهِ، وَكَسْبٌ مِنَ العِبَادِ.

86. அடியார்களின் செயல்கள் அல்லாஹ்வின் படைப்பாகவும்

அடியார்களின் உழைப்பாகவும் இருக்கிறது.

ولمْ يُكَلِّفْهُم اللهُ تعالى إِلاَّ مَا يُطِيقُون، وَلا يُطيقُونَ إِلاَّ مَا كَلَّفَهُمْ وَهُوَ تَفْسير: «لا حول ولا قوة إلا بالله». نقول: لا حِيلَةَ لأَحَدٍ، وَلاَ حَرَكَةَ لأحَدٍ ولا تَحَوُّلَ لأحَدٍ عَنْ مَعْصِيَةِ اللهِ إِلاَّ بِمعونَةِ اللهِ، وَلاَ قُوَّةَ لأحَدٍ على إِقَامَةِ طَاعَةِ اللهِ والثَّبَاتِ عَلَيْهَا إلاَّ بِتَوفِيقِ الله.

87. அடியார்களின் சக்திக்கு உட்பட்டவற்றைத்தான் அல்லாஹ் அவர்களுக்குச் சட்டமாக்கியிருக்கின்றான். அல்லாஹ் அவர்களுக்குச் சட்டமாக்கியதைத் தவிர வேறு எதனையும் செய்வதற்கு அடியார்கள் சக்தி பெறமாட்டார்கள். “லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்” “பாவத்திலிருந்து தப்பிக்க முடியாது; நன்மை செய்ய சக்தி பெற முடியாது, அல்லாஹ்வைக் கொண்டே தவிர.” இதற்குரிய பொருள், அல்லாஹ்வுடைய உதவியின்றி அல்லாஹ்விற்கு மாறுசெய்வதைவிட்டு எவரும் தப்பிக்க முடியாது. அல்லாஹ்வின் அருளின்றி எவராலும் நன்மை செய்யவோ அதில் நிலைத்திருக்கவோ முடியாது.

وَكُلُّ شَيْءٍ يَجْرِي بمَشِيئَةِ الله تعالَى وَعِلْمِهِ وَقَضَائِهِ وَقَدَرِهِ. غَلَبَتْ مَشيئَتُهُ المَشِيئَاتِ كُلَّهَا، وَغَلَبَ قَضَاؤُهُ الحِيَلَ كُلَّهَا، يَفعَلُ مَا يَشَاءُ وَهُو غَيْرُ ظَالِمٍ أَبَداً، تَقَدَّسَ عَنْ كُلِّ سوء وحين، وتَنَزَّهَ عَن كلِّ عَيْب وشَيْن. ﴿لَا يُسْأَلُ عَمَّا يَفْعَلُ وَهُمْ يُسْأَلُونَ﴾ [الأنبياء:٢٣].

88. அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியும் அவனுடைய அறிவு, அவனுடைய விதிப்படியும்தான் நடக்கிறது. அவனுடைய நாட்டம், படைப்பினங்களின் நாட்டங்கள் அனைத்தையும் மிகைத்து இருக்கிறது. அவனுடைய தீர்ப்பு, அவர்களின் தந்திரங்கள்

அனைத்தையும் மிகைத்து விட்டது. அவன் நாடியதைச் செய்கிறான்; அவன் ஒருபோதும் அநியாயம் செய்பவன் அல்லன்; அவன் கேள்வி கேட்கப்பட மாட்டான்; தீயவை மற்றும் அழிவை விட்டு அவன் தூய்மையானவன். அனைத்து அசுத்தங்களையும் குறைகளையும் விட்டு அவன் பரிசுத்தமானவன்.

அல்லாஹ் கூறுகின்றான்:

அவன் செய்வதைப் பற்றி அவனிடம் கேட்க முடியாது. அவர்கள்தாம் கேட்கப்படுவார்கள். (அல்குர்ஆன் 21:23)

وفِي دُعَاءِ الأَحْياءِ وَصَدَقَاتِهم مَنْفَعَةٌ لِلأَمْوَات.

89. உயிருள்ளவர்கள் கேட்கின்ற பிரார்த்தனைகளிலும், வழங்குகின்ற தர்மங்களிலும் இறந்தவர்களுக்குப் பலன் உண்டு.

واللهُ تَعالَى يَسْتَجِيبُ الدَّعَوَاتِ، وَيَقْضِي الحَاجَاتِ.

90. அல்லாஹ் பிரார்த்தனைகளை அங்கீகரிக்கின்றான்; தேவைகளை நிறைவேற்றுகின்றான்.

وَيَمْلِكُ كُلَّ شَيْءٍ، وَلاَ يَمْلِكُهُ شَيْءٌ، وَلاَ غِنَى عَنِ اللهِ تَعَالى طَرْفَةَ عَيْنٍ، وَمَنِ اسْتَغْنَى عَنِ اللهِ طَرْفَةَ عَيْنٍ، فَقَدْ كَفَرَ وَصَارَ مِنْ أَهْلِ الحَيْنِ.

91. அனைத்துப் பொருளுக்கும் அவனே உரிமை கொண்டாடுகின்றான். அவனை எதுவும் உரிமை கொண்டாட முடியாது. (அவன் உரிமையாளன் - படைப்பினங்கள் அவனுடைய உரிமை.) கண்சிமிட்டும் நேரங்கூட அல்லாஹு தஆலாவை விட்டு நாம் தேவையற்று இருக்க முடியாது. அவனை விட்டு, கண்சிமிட்டும் நேரங்கூட எவன் தன்னைத் தேவையற்றவனாகக் கருதுகின்றானோ

அவன் இறைவனை நிராகரித்து விட்டான்; அழிந்து நாசமாகுவோரில் சேர்ந்து விட்டான்.

والله يَغْضَبُ وَيَرْضَى، لاَ كَأَحَدٍ مِنَ الوَرَى.

92. அல்லாஹ் கோபப்படுகின்றான்; மகிழ்ச்சியடைகிறான்; இத்தன்மைகளில் அவன் மனிதர்களில் எவனுக்கும் ஒப்பானவன் இல்லை.

பாடம் 24

நபித்தோழர்கள்

وَنُحِبُّ أَصْحَابَ رسُولِ اللّٰه صلى اللّٰه عليه وعلى آله وسلم، وَلاَ نُفرطُ فِي حُبِّ أَحَدٍ مِنْهُم؛ وَلاَ نَتَبَرَّأُ مِنْ أَحَدٍ مِنْهُم، وَنُبْغِضُ مَنْ يُبْغِضُهُم، وَبِغَيْرِ الخَيْرِ يَذْكُرُهُم، ولا نُذْكُرُهُم إِلاَّ بِخَيْرٍ, وَحُبُّهُم دِينٌ وإِيمَانٌ وإِحْسَانٌ، وَبُغْضُهُم كُفْرٌ ونِفَاقٌ وطُغْيَانٌ.

93. இறைத்தூதரின் தோழர்களை நாம் நேசிப்போம். அவர்களில் எவரை நேசிப்பதிலும் அளவு கடக்க மாட்டோம். அவர்களில் எவரை விட்டும் நீங்கிக் கொள்ளவும் மாட்டோம். அவர்களைக் கோபிப்பவரையும், வெறுப்பவரையும் நன்மையன்றி அவர்களைப் பற்றி பேசுவோரையும் நாமும் கோபிப்போம்; மேலும் வெறுப்போம். நபித்தோழர்களைப் பற்றி நன்மை மற்றும் உயர்வுகளுடனேயே தவிர நாம் பேச மாட்டோம். அவர்களை நேசிப்பது மார்க்கமாகும்; இறைநம்பிக்கையாகும்; மனத்தூய்மையும் ஒழுக்கமுமாகும். அவர்களை வெறுப்பது ‘குஃப்ர்’ (இறைநிராகரிப்பு), ‘நிஃபாக்‘ (நயவஞ் சகத்தனம்), ‘துக்யான்’ (எல்லை மீறுதல்) ஆகும்.

பாடம் 25

கிலாஃபத்

وَنُثْبِتُ الخِلاَفَةَ بَعْدَ رَسُولِ اللّٰه صلى الله عليه وعلى آله وسلم: أَوَّلاً لأبي بَكْرٍ الصِّدِّيقِ رَضيَ اللّٰهُ عَنْهُ، تَفْضِيلاً لَهُ وتَقديماً عَلَى جَمِيعِ الأُمَّةِ، ثُمَّ لعُمَرَ بن الخَطَّابِ رَضِيَ اللّٰهُ عَنْهُ، ثُم لِعُثْمَانَ رَضِيَ اللّٰهُ عَنْهُ، ثُمَّ لِعَلِيٍّ بن أبي طَالبٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ، وَهُمُ الخُلَفَاءُ الرَّاشدُونَ والأَئِمَّةُ المُهْتَدُون.

94. அல்லாஹ்வின் தூதருக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்புக்குத் தகுதியானவர் அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரழி) ஆவார். இவரைச் சமுதாய மக்கள் அனைவரையும் விட மேன்மைப்படுத்துகின்றோம். பிறகு ஆட்சிப் பொறுப்புக்குத் தகுதியானவர் உமர் (ரழி). பிறகு, உஸ்மான் (ரழி), பிறகு, அலீ (ரழி), இவர்கள் நேர்வழி பெற்ற ஆட்சியாளர்கள்; நேர்வழி பெற்ற முன்னோடிகள்.

பாடம் 26

சொர்க்க வாசிகள்

وَأَنَّ العَشَرَةَ الَّذِينَ سَمَّاهُم رَسُولُ اللهِ صلى الله عليه وعلى آله وسلم وَبشَّرَهُم بِالجَنَّةِ، نَشْهَدُ لَهُم بِالجَنَّةِ، عَلَى مَا شَهِدَ لَهُم رَسُولُ اللهِ صلى الله عليه وعلى آله وسلم، وَقَوْلُهُ الحقُّ، وَهُمْ: أَبُوبَكْرٍ، وَعُمَرُ، وعُثْمَانُ، وَعَلِيٌّ، وَطَلْحَة، والزُّبَيْرُ، وَسَعْدٌ، وَسَعِيدٌ، وَعَبْدُالرَّحمنِ بن عَوْفٍ، وأَبُوعُبَيْدَةَ بنُ الجَرَّاحِ وَهُوَ أَمِينُ هَذِهِ الأُمَّةِ، رَضِيَ اللهُ عَنْهُم أَجْمَعِين.

95. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், பெயரைக் குறிப்பிட்டு, 'சொர்க்க வாசிகள்' என்று நற்செய்தி கூறிய பத்துத் தோழர்களுக்கு சொர்க்கம் உண்டு என நாமும் சாட்சி கூறுகிறோம். அல்லாஹ்வுடைய தூதரின் கூற்று சத்தியமானதே! அவர்கள், அபூபக்கர், உமர், உஸ்மான், அலீ, தல்ஹா, ஸுபைர், ஸஃது, ஸயீத், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப், அபூ உபைதா இப்னுல் ஜர்ராஹ் ஆவார்கள். இவர், இந்தச் சமுதாயத்தின் 'அமீன்' நம்பிக்கைக்குரியவர் ஆவார். அல்லாஹ் இவர்கள் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக!

பாடம் 27

நபித்தோழர்கள் மற்றும் நல்லோர் விசயத்தில் நமது நிலைபாடு

وَمَنْ أَحْسَنَ القَوْلَ فِي أَصْحَابِ رَسُولِ اللّٰه صلى الله عليه وعلى آله وسلم، وأَزْوَاجِهِ الطَّاهِرَاتِ مِنْ كُلِّ دَنَسٍ، وَذُرِّيَّاتِهِ المقدسينَ مِنْ كُلِّ رِجْسٍ؛ فَقَدْ بَرِئَ مِنَ النِّفَاقِ.

96. அல்லாஹ்வின் தூதருடைய தோழர்கள் விஷயத்திலும், அழுக்குகளை விட்டுத் தூய்மையான அவர்களுடைய மனைவிமார்கள் விஷயத்திலும், அசுத்தங்களை விட்டுத் தூய்மையான அவர்களுடைய சந்ததிகள் விஷயத்திலும் யார் அழகிய பேச்சுகளைப் பேசுகிறாரோ அவர் நயவஞ்சகத்தனத்தைவிட்டு நீங்கிவிட்டார்.

وعُلماءُ السَّلَفِ مِنَ السَّابِقِينَ، وَمَنْ بعْدَهُم مِنَ التَّابِعِينَ -أَهْلُ الخَيْرِ والأَثَرِ، وأَهْلُ الفِقْهِ والنَّظَرِ- لا يُذكَرُونَ إِلاَّ بِالجَمِيلِ، وَمَنْ ذَكَرُهُم بِسُوءٍ فَهُوَ عَلى غَيْرِ السَّبِيلِ.

97. முன்னோர்களின் சிறப்பிற்குரிய அறிஞர்கள், அவர்களைப் பின்பற்றிய, அவர்களின் செய்திகளை அறிவிக்கின்ற சான்றோர்கள், மார்க்கச் சட்ட அறிஞர்கள் இவர்கள் அனைவரையும் அழகிய முறையில்தான் நினைவு கூரப்பட வேண்டும். அவர்களைத் தீயமுறையில் யார் பேசுகிறாரோ அவர் வழிதவறியவர்.

وَلاَ نُفَضِّلُ أَحداً مِنَ الأَوْلِيَاءِ عَلَى أَحَدٍ مِنَ الأَنْبِيَاءِ عَلَيْهِمُ السَّلاَمُ،

ونقولُ: نَبِيٌّ وَاحِدٌ أَفْضَلُ مِنْ جَمِيعِ الأَوْلِيَاءِ.

98. இறைத்தூதர் எவரையும்விட இறைநேசர்களில் எவரையும் மேன்மைப்படுத்த மாட்டோம். மேலும், ஓர் இறைத்தூதர் எல்லா இறைநேசர்களைவிடவும் மேன்மை மிக்கவர் என்று கூறுவோம். இறைநேசர்களின் சிறப்புகள் பற்றி வந்த செய்திகளையும் அவர்களுடைய அறிவிப்புகளிலிருந்து நம்பத்தகுந்தவர்கள் அறிவித்த சரியான செய்திகளையும் நம்பிக்கை கொள்கிறோம்.

وَنُؤْمِنُ بِمَا جَاءَ مِنْ كَرَامَاتِهِم، وَصَحَّ عَنِ الثِّقَاتِ مِنْ رِوَايَاتِهِم.

99. அவர்களின் கராமத்துகள் குறித்து நம்பத்தகுந்த அறிவிப்பாளர்கள் மூலம் கிடைத்திருக்கும் செய்திகளையும் நம்பிக்கை கொள்கிறோம்.

பாடம் 28

மறுமையின் அடையாளங்கள்

وَنُؤْمِنُ بِأَشْرَاطِ السَّاعَةِ: مِنْ خُرُوجِ الدَّجَّال، ونُزُولِ عِيسَى بنِ مَرْيَمَ عَلَيْهِ السَّلامُ مِنَ السَّماءِ، وَنُؤْمِنُ بِطُلُوعِ الشَّمْسِ مِنْ مَغْرِبِهَا، وَخُرُوجِ دَابَّةِ الأَرْضِ مِنْ مَوْضِعِهَا.

100. மறுமையின் அடையாளங்கள்: தஜ்ஜாலின் வருகை, ஈசா இப்னு மர்யம் வானத்திலிருந்து இறங்குதல், சூரியன் மேற்கிலிருந்து உதித்தல், பூமியின் மிருகம் அதனுடைய இடத்திலிருந்து வெளிப்படுதல் ஆகியவற்றை நம்பிக்கை கொள்கிறோம்.

பாடம் 29

மார்க்கத்திற்கு முரண்பட்டவர்கள்

وَلاَ نُصَدِّقُ كَاهِناً وَلاَ عَرَّافاً، وَلاَ مَنْ يَدَّعِي شَيْئاً يُخَالِفُ الكِتَابَ والسُّنَّةَ وإجْمَاعَ الأُمَّةِ.

101. சோதிடக்காரன், குறிபார்ப்பவன், மைப் போட்டுப் பார்ப்பவன் இன்னும் குர்ஆன் சுன்னா மற்றும் சமுதாயத்தின் ஒருமித்த முடிவுக்கு மாற்றமான கருத்தை வாதிடுபவன் இவர்களில் எவரையும் மெய்ப்பிக்க மாட்டோம்; இவர்களின் கூற்றுகளை நம்பமாட்டோம்.

முடிவுரை

وَنَرَى الجَمَاعَةَ حَقًّا وَصَوَاباً، والفُرْقَةَ زَيْغاً وَعَذَاباً.

102. 'ஜமாஆ' - சேர்ந்திருப்பதை சத்தியமானது, சரியானது என்றும் பிரிவதை வழிகேடாகவும், வேதனையாகவும் கருதுகிறோம்.

وَدِينُ اللهِ فِي الأَرضِ وَالسَّماءِ وَاحِدٌ، وهُو دينُ الإِسْلاَمِ، قال الله تعالى إِنَّ الدِّينَ عِنْدَ اللهِ الْإِسْلَامُ [آل عمران:١٩]، وقال تعالى وَرَضِيتُ لَكُمْ الْإِسْلَامَ دِينًا [المائدة:٣].

103. அல்லாஹ்வுடைய மார்க்கம் பூமியிலும், வானத்திலும் ஒன்றுதான். அதுதான் இஸ்லாமிய மார்க்கம்.

அல்லாஹ் கூறுகின்றான்: நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாம்தான். (அல்குர்ஆன் 3:19)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: உங்களுக்கு இஸ்லாமை மார்க்கமாக நான் பொருந்திக் கொண்டேன். (அல்குர்ஆன் 5:3)

وَهُو بَيْنَ الغُلُوِّ والتَّقْصِيرِ، وَبَيْنَ التَّشْبِيهِ والتَّعْطِيلِ، وَبَيْنَ الجَبْرِ وَالقَدَرِ، وَبَيْنَ الأَمْنِ وَالإِيَاسِ.

104. மார்க்கத்தில் அளவு கடத்தல் அல்லது அளவைக் குறைத்தல், அல்லாஹ்வைப் படைப்பினங்களுடன் ஒப்பிடுதல் அல்லது அவனுடைய தன்மைகளை மறுத்தல், விதியின் கீழ் நம்மை முற்றிலும் நிர்ப்பந்திக்கப்பட்டவர்களாக நம்புதல் அல்லது விதியை மறுத்தல், அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து அச்சமற்று இருத்தல் அல்லது அல்லாஹ்வின் கருணையை விட்டு நிராசையடைதல் இத்தகைய கொள்கைகளுக்கு இடையில் இஸ்லாம் நடுநிலை வகிக்கிறது.

فَهَذَا دينُناً واعْتِقَادُناً ظَاهِراً وَبَاطِناً. وَنَحْنُ بُرَآءُ إلى اللهِ مِنْ كُلِّ مَنْ خَالَفَ الَّذِي ذَكَرْنَاهُ وبَيَّنَّاهُ.

105. இது நம்முடைய மார்க்கம். உள்ளும் புறமும் இதுவே நம்முடைய கொள்கை. நாம் கூறியதற்கும் விவரித்ததற்கும் முரண்பட்ட அனைத்தையும் விட்டு விலகி அல்லாஹ்வின் பக்கம் செல்கின்றோம்.

وَنَسْأَلُ اللهَ تَعَالَى أَنْ يُثَبِّتَنَا عَلَى الإيمانِ، ويَخْتِمَ لَنَا بِهِ، وَيَعْصِمَنَا مِنَ الأَهْوَاءِ المُخْتَلِفَةِ، والآرَاءِ المُتَفَرِّقَةِ، وَالمَذَاهِبِ الرَّدِيَّةِ، مِثْلَ المشبَّهَةِ، والمعْتَزِلَةِ، والجَهْمِيَةِ، والجَبْرِيَّةِ، والقَدَرِيَّة وَغَيْرِهم، مِنَ الَّذِينَ خَالَفُوا السُّنَّةَ والجَمَاعَةِ، وَحَالَفُوا الضَّلالَةَ, ونَحْنُ مِنْهُم بَرَاءٌ، وَهُمْ عِنْدَنَا ضُلاَّلٌ وأَرْدِيَاءُ. وَبِاللهِ العِصْمَةُ وَالتَّوْفِيقُ.

நம்மை ஈமானின் மீது அல்லாஹ் உறுதிப்படுத்த வேண்டும். அதைக் கொண்டே நமக்கு முடிவை எழுதவேண்டும். மாறுபட்ட மன இச்சைகளை விட்டும், பலதரப்பட்ட சிந்தனைகளை விட்டும் தீய வழிகளை விட்டும் உதாரணமாக முஷப்பிஹா, முஃதஸிலா, ஜஹ்மிய்யா, ஜப்ரிய்யா, கதரிய்யா மேலும் சுன்னா மற்றும் ஜமாஆவிற்கு முரண்பட்டு வழிகேட்டில் சென்றுவிட்ட ஏனைய பிரிவினர் இத்தகையோரை விட்டு அல்லாஹ் நம்மைப் பாதுகாக்க வேண்டும் என்று அல்லாஹ்விடம் நாம் பிரார்த்தனை செய்கிறோம். இத்தகையோரை விட்டு நாம் விலகியவர்கள். இவர்கள் நம் பார்வையில் வழிகெட்டவர்கள்; தீயவர்கள். அல்லாஹ்வைக் கொண்டே பாதுகாப்பும் நல்லருளும் இருக்கின்றன.
